# மூச்சில் வாழும் புல்லாங்குழல்கள்



## ராஜேஷ்குமார்



**1**

**சுற்றுச்சூழலை மாசுபடுத்தி மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சி.எஃப்.சி. (க்ளோரா ஃப்ளோரா கார்பன்) என்ற ரசாயனப் பொருளை ரெஃப்ரிஜிரேட்டர்களில் பயன்படுத்துகிறார்கள். சூரியக் கதிரை சத்திகரிக்கும் ஓஸோன் படலத்தை ஓட்டையாக்கி மனித குலத்தின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கிக் கொண்டு வருவது இந்த சி.எஃப்.சி.யின் கைங்கர்யம்தான். சி.எஃப்.சி. உள்ள குளிர் சாதனப் பெட்டிகளை உபயோகிக்க அமெரிக்கா போன்ற நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

புழுதிப்படலம் நாலடி உயரத்திற்கு கிளம்ப அந்த கிராமத்திற்குள் நுழைந்தது ஆலிவ் பச்சை வர்ண மாருதி கார்.

ஸ்டியரிங்கைக் கையாள்கிற சந்தீப்புடன் ஒட்டினாற்போல் உட்கார்ந்திருந்த சிநேகா உள்ளங்கைகளைப் பரபரவென்று தேய்த்தபடி சொன்னாள்.

''குளிர் பிச்சு உதறுது சந்தீப். ஜன்னல் கண்ணாடியை ஏத்தி விட்டுக்கலாம்னா கேக்க மாட்டேங்கறீங்க.''

''கண்ணாடியை ஏத்தி விட்டுட்டா அப்புறம் நீ இப்படி என்னோட ஒட்டி உக்கார மாட்டே.''

''ஓகோ... இந்த சதித்திட்டம் எனக்கு தெரியாமப் போச்சு. இனிமே ஜாக்கிரதையா இருக்கேன்.''

சந்தீப் சிரித்தான்.

''நோ ப்ராப்ளம். இந்த ரெண்டு மணி நேர பிரயாணத்தில் கிடைச்ச கதகதப்பு இன்னும் ரெண்டு மாசத்துக்கு தாங்கும்.''

''ஏம்பா இப்படி அலையறீங்க. படிப்பு முடிஞ்சாக் கல்யாணம். நான் எங்கே போயிடப் போறேன்?''

''இப்போதான் இம்ப்ளாண்ட் ட்ரெயினிங். இன்னும் முழுசா ரெண்டு செமஸ்டர் பாக்கி இருக்கே.''

அவனை செல்லமாய்க் குத்தப் போனவள் திடீரென சீரியசானாள்.

''சந்தீப்... ட்ரெயினிங்ன்னா உடனேதான்

ஞாபகத்துக்கு வருது. இந்த ஃபாக்டரில நான் ட்ரெயினிங் எடுக்க பர்மிஷன் தருவாங்க இல்லே?''

''லீடிங் புராஜக்ட் கன்சல்ட்டன்ட்டான எனக்கு இண்டஸ்ட்ரீ வட்டாரங்கள்ல இருக்கற செல்வாக்கு தெரிஞ்சா என்னைப் பார்த்து நீ இந்தக் கேள்வியைக் கேக்க மாட்டே.''

''இல்லே சந்தீப். மெட்ராஸிலிருக்கும் ஒரு கம்பெனியில் காலேஜ் ஹெச்.ஓ.டி. எனக்கு பர்மிஷன் வாங்கிக் கொடுத்தார். 'ஸாரி சார்... என்னோட வெல்விஷர் வேற நல்ல கம்பெனில வாங்கித் தர்றேன்னார்'னு சொல்லி அதை வேண்டாம்னுட்டு வந்திருக்கேன்.''

''இந்த ஃபாக்டரியில் அத்தனையும் இம்போர்ட்டட் மெஷின்ஸ். பார்த்தா பிரமிச்சிடுவே. இவங்க உபயோகிக்கும் கெமிக்கல் ஃபார்முலாவெல்லாம் உன்னோட கெமிக்கல் என்ஜினீயரிங் படிப்புக்கு ரொம்ப பயன்படும். நிச்சயமா இட்ஸ் கோயிங் டு பி ஏ வெரி யூஸ்புல் ட்ரெயினிங்.''

''பர்மிஷன் வாங்கித் தந்து, பேப்பர்சை காலேஜுக்கு அனுப்பி வைக்க வேண்டியது உங்க பொறுப்பு.''

காரைக் குறுக்கலான பாதைக்குள் விரட்டினபடியே தலையசைத்தான்.

''நான் இருக்கேன். நீ காலேஜ் கவலையெல்லாம் மறந்துடு. ஒரே கல்லில் ரெண்டு மாங்கா அடிச்சிட மாட்டேன்?''

''புரியலையே?''

''உனக்கு நல்ல ட்ரெயினிங் வாய்ப்பை வாங்கிக் குடுத்த மாதிரியும் ஆச்சு. இந்தப் பொட்டல்காடு கிராமத்தில் கன்சல்ட்டேஷனுக்காகத் தங்கியிருக்கற ரெண்டு மாசமும் காதலுக்கு லீவ் விட வேண்டிய அவசியமும் இல்லை.''

''புராஜெக்ட் கன்சல்ட்டன்ட்டா மட்டுமில்லே, காதல் கன்சல்ட்டன்ட்டாவும் உங்களைப் போடலாம். வண்டி வண்டியா கிரிமினல் மைண்ட்.''

புன்னகைத்தபடியே காரை ஓரங்கட்டி நிறுத்தினான்.

''குவார்ட்டர்ஸ் சாவி வாங்கிட்டு வர்றேன். ஒரு அஞ்சு நிமிஷம் உக்காந்திரு சிநேகா.''



பெரிய ஃபாக்டரியின் காம்பவுண்ட் ஓரமாய் கார் நின்றிருப்பதை அப்போதுதான் கவனித்தாள். ஆச்சரியப்பட்டாள்.

''ஊரைப் பார்த்தா சரியான பட்டிக்காடா இருக்கும் போலிருக்கு. இங்கே இவ்வளவு பெரிய ஃபாக்டரியா?''

''விஷயம் இருக்கு.''

''சொல்லுங்க தெரிஞ்சிக்கிறேன்.''

''இது இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் ஏரியா... அதனால இங்கே ஃபாக்டரி வெச்சா அரசாங்கத்திடமிருந்து நிறைய சலுகைகள் கிடைக்கும்.''

''இதான் விஷயமா?''

''இது மட்டுமில்லை. இந்த புராஜக்ட்டுக்குத் தேவையான ரா மெட்டீரியல் கிராமத்தின் சுத்து வட்டாரங்களில் ஏராளமாகக் கிடைக்குது.''

''அப்புறம்?''

''தொழிற்சாலைக்கு முக்கியமா தட்டுப்பாடில்லாம தண்ணி கிடைக்கணும்.''

''தண்ணிக்கு இங்கே பஞ்சமே இல்லையா?''

''ஃபாக்டரிக்குப் பின்னாலேயே ஆறு... குறைந்தபட்சம் ஒரு ஆள் ஆழத்திற்கு தண்ணி எப்பவும் ஓடிட்டிருக்கும்.''

''இவங்க புராடக்ட் என்ன சந்தீப்?''

''அவசரப்படாதே. உள்ளே போகறப்ப நீ ஒவ்வொண்ணாத் தெரிஞ்சிப்பே. நான் குவார்ட்டர்ஸ் சாவி வாங்கிட்டு வந்துடறேன். மொதல்ல ரூமுக்குப் போய் ஒரு குட்டித் தூக்கம் போட்டு ரிப்ரஷ் பண்ணிக்கிட்டு அப்புறமா இங்கே வரலாம்.''

சொல்லிக் கொண்டே தொழிற்சாலையின் மெயின் கேட்டை நோக்கிப் போனான்.

பக்கச் சுவர்கள் முழுவதும் கண்ணாடியால் வேயப்பட்ட செக்யூரிட்டி ஆபீசுக்குள் நுழைந்து காக்கி யூனிபாரம் போட்ட ஆபீசருடன் அவன் கைகுலுக்கிப் பேசுவதை காரிலிருந்தே பார்க்க முடிந்தது.

சற்று நேரத்தில் திரும்பி வந்தான்.

''நல்லவேளையா ஏ பிளாக்கிலேயே கிடைச்சது. ஃபாக்டரிக்கு பக்கத்திலேயே இருக்கு. போன

தடவை வந்தப்ப மூலைல தள்ளிட்டாங்க. கடைசி பிளாக். வெறுத்துப் போயிட்டேன்.''

இக்னிஷியனை உசுப்பிக் கொண்டே சொன்னான் சந்தீப். சிநேகா கேட்டாள்.

''குவார்ட்டர்ஸ் வசதியா இருக்குமா சந்தீப்?''

''கிராமத்தில் இருக்கோம்கற ஃபீலிங்கே இருக்காது. கேபிள் டிவி. முதற்கொண்டு எல்லா வசதியும் இருக்கு. நீ கவலையேபட வேண்டாம்.''

கார் ரெண்டு வளைவுகளைக் கடந்து குவார்ட்டர்ஸ் வளாகத்தை தொட்டது.

தீப்பெட்டி தீப்பெட்டியாய் கான்கிரீட் துண்டங்கள்.

பூட்டிக் கிடந்த அந்த குவார்ட்டர்சின் முன்னால் காரின் இயக்கத்தை தடை செய்தான் சந்தீப்.

நவ்தால் பூட்டுக்கு விடுதலை கொடுத்து உள்ளே சென்றார்கள்.

''வாவ்...'' என்று வியந்தாள் சிநேகா.

''எப்படி இருக்கு குவார்ட்டர்ஸ்?''

''வசதியா இருக்கும்னு சொன்னீங்க. இவ்வளவு வசதியா இருக்கும்னு நான் எதிர்பார்க்கலை. தரையெல்லாம் மெத்துன்னு கார்பெட். டி.வி., ஃப்ரிஜ், ஃபோம் மெத்தை...''

''இது எக்சிகியூட்டிவ் குவார்ட்டர்ஸ் சிநேகா.''

''கல்யாணத்துக்கப்புறம் ஹனிமூனை இங்கேயே வெச்சிக்கலாம் போலிருக்கே.''

''இப்பவே வெச்சிகிட்டாப் போச்சு.''

''உதைப்பேன்'' போலியாய் மிரட்டினாள்.

சந்தீப் சூட்கேசை விரித்து டவலை எடுத்துக் கொண்டான்.

''குளிச்சிட்டு வந்து உதை வாங்கிக்கறேன்.''

சிரித்துக் கொண்டே பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

அதே விநாடி.

தட்... தட்... தட்...

குவார்ட்ஸ் கதவு பலமாய்த் தட்டப்பட்டது.

''இதோ வர்றேன்.''

சிநேகா குரல் கொடுத்துக் கொண்டே கதவை நெருங்குவதற்குள் பொறுமை இல்லாத்தனமாய் தபதபவென ஏராளமாய் தட்டல்கள்.

கொஞ்சம் கோபத்துடனே கதவைத் திறந்தவள் கலவரமானாள்.



வெளியே பத்துப் பதினைந்து கிராமத்து ஆசாமிகள் கும்பலாய் நின்றிருந்தார்கள்.

''யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?''

அவர்கள் பதட்டம் வழியும் குரலில் படபடத்தார்கள்.

''உயிருக்கு போராடிட்டிருக்கான். இவனை டவுன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணும். காரைப் பார்த்துட்டு இங்கே ஓடி வர்றோம். கொஞ்சம் காரோட வாங்கம்மா; ஒரு உயிர் பிழைக்கும்.''

அந்தக் கும்பலுக்கு பின்னே பார்வையைப் போட்ட சிநேகா லேசாய் அதிர்ந்தாள். அவர்களின் கைத்தாங்கலில் மயங்கி துவண்டு கிடந்தான் ஒரு இருபத்தைந்து வயது இளைஞன். பட்டு வேட்டி. சட்டை உடுத்தியிருந்தான். ஆடை பூராவும் ரத்தத்தில் நனைந்திருந்தது..

---

**இமயமலையின் மேலே எவரெஸ்டை விட உயரமான சிகரம் ஒன்று உருவாகிக் கொண்டு இருக்கிறது. கேட்க ஆச்சரியமாய் இருக்கிறதா? அடுத்த வரிகளைப் படித்தால் கவலையாய் இருக்கும். எவரெஸ்ட் சிகரத்தை தொடும் ஒவ்வோர் மலையேற்றக் குழுவும் அங்கே விட்டு வரும் உணவு டப்பாக்கள், பிளாஸ்டிக் பைகள், தட்டுக்கள், டம்ளர்கள் ஆகியவை குப்பை மலையாய் உருவாகி வருகிறது. சுற்றுச்சூழலைக் கெடுப்பதில் மனிதன் எவரெஸ்ட் உயர சாதனை செய்கிறான் என்பதற்கு இதைவிட சிறந்த ஆதாரம் எதுவும் தேவையில்லை. வேதனைடா சாமி!**

2

---

சிநேகா பதட்டத்தோடு உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள்.

''சந்தீப்.''

பாத்ரூமின் தண்ணீர் சப்தத்தில் அவள் குரல் எடுபடவில்லை. மயக்கத்தில் கண்கள் சொருகிக் கிடக்கும் அந்த இளைஞன் மனசை அறுத்தான்.

'சந்தீப்பிடம் விஷயத்தைச் சொல்லி நேரத்தை வீணாக்க வேண்டுமா? நாமே காரை எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான்.'

மேஜை மேல் கிடந்த கார் சாவியை பொறுக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

''வாங்க போலாம்.''

''ரொம்ப நன்றிங்கம்மா.''

கும்பலில் சிலர் நெகிழ்ந்து போய் சொன்னார்கள்.

''நன்றியெல்லாம் அப்புறம். மொதல்ல அவரை பின்சீட்டில் படுக்க வையுங்க.''

''மாரி... நீ தோளைப் பிடி. கவனம் கவனம்...''

காரின் பின்பக்க இருக்கையில் அந்த இளைஞனைப் படுக்க வைத்தார்கள்.

''நாலு பேர் மட்டும் கார்ல கூடப் போங்க. மத்தவங்க எல்லோரும் பன்னெண்டு மணி பஸ்சுல வந்து சேர்ந்துடுங்க.''

கும்பலில் மையமாய் இருந்த ஒருவர் சொல்ல, அளவாய் சில பேர் மாத்திரம் காரில் ஏறினார்கள்.

''போலாம்ங்க.''

சிநேகா இக்னீஷியனை உசுப்பினாள்.

கார் மண் புழுதியில் மீண்டும் குளிக்க ஆரம்பித்தது.

தலைக்கு மேல் இருந்த நீள் செவ்வகக் கண்ணாடி வழியே மயக்கத்தில் அனத்திக் கொண்டிருக்கும் இளைஞனைப் பார்த்தாள் சிநேகா.

ஆச்சரியத்தோடு கேட்டாள்.

''மாலை, பட்டு வேட்டியெல்லாம் போட்டிருக்காரு?''

அவர்களில் ஒருவர் தலையாட்டினார்.

''ஆமாம்மா... இவன் கல்யாண மாப்பிள்ளையா மணவறையில் உட்கார்ந்தான். பொண்ணோட கழுத்துல தாலியைக் கட்டறதுக்கு முன்னால மயங்கி விழுந்துட்டான். சாதாரண மயக்கமா இருக்கும்னு நினைச்சு தண்ணியெல்லாம் தெளிச்சுப் பார்த்தோம். கொஞ்ச நேரத்துல ரத்தமாக் கக்க ஆரம்பிச்சான். பயமாயிடுச்சு. உள்ளூர் வைத்தியரைக் கூப்பிட்டுப் பார்த்தோம். அவர் கையை விரிச்சிட்டார். நிலைமை ரொம்ப மோசமா இருக்கு. இவன் பிழைக்கணும்னா உடனே டவுன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிடுங்கன்னுட்டார். இங்க பஸ் வசதி கம்மிம்மா. கட்டை வண்டில ஊர்ந்து போறதுக்குள்ளே இந்த பாவிப் பையன் உசிரை விட்டுட்டான்னா மணவறைல



உக்காந்திருக்கற அந்தப் பொண்ணோட வாழ்க்கை கேள்விக்குறி ஆயிடும். ஃபாக்டரி பக்கம் கார் இருக்குமோன்னு நினைச்சு ஓடி வந்தோம். நல்லவேளையா முன்னால உங்க கார், நின்னிட்டிருந்துச்சு. உங்க உதவியை நாங்க என்னிக்குமே மறக்க மாட்டோம்மா.''

கார் ஹைவேசைத் தொட்டு சீற ஆரம்பித்தது.

அவர்கள் சொன்ன வழிகளில் கார் ஓடி பத்தே நிமிஷத்தில் அந்த ஆஸ்பத்திரி வளாகத்தை தொட்டது.

இளைஞனை தாங்கிப் பிடித்து உள்ளே கொண்டு சென்றார்கள். சிநேகா பின்னாலேயே சென்றாள்.

அம்புக்குறி காட்டிய வழியில் வேகநடை போட்டு டாக்டரின் அறையைத் தொட்டாள்.

ஒரு ஒல்லியான ஆசாமியின் வெற்று முதுகில் ஸ்டெத்தை ஒட்டிக் கொண்டிருந்தார் டாக்டர்.

''எக்ஸ்க்யூஸ்மி டாக்டர்.''

சிநேகாவின் குரலால் கலைந்து போய் நிமிர்ந்தார்.

''எஸ்...''

''ஒரு எமர்ஜென்சி கேஸ் டாக்டர். நீங்க உடனடியா பார்த்தாகணும்.''

அந்தக் கும்பலின் கைகளில் துவண்டு கிடந்த இளைஞனைக் காட்டினாள்.

அவன் சர்ட் பூராவும் வழிந்திருந்த உலராத ரத்தத்தைப் பார்த்து டாக்டர் சட்டென இருக்கையை விட்டு எழுந்தார்.

''என்னாச்சு?''

''திடீர்னு ரத்தமா வாந்தி எடுத்து மயக்கமாயிட்டான்ங்க'' என்று ஆரம்பித்து சிநேகாவிடம் சொன்ன விவரங்கள் அனைத்தையும் டாக்டரிடமும் தெரிவித்தார் கும்பலில் இருந்த அந்த நபர்.

''எமர்ஜென்சி வார்டுக்கு கொண்டு போங்க. நான் இதோ வர்றேன்.''

ஏறக்குறைய முப்பத்தைந்து நிமிஷங்களுக்குப் பின் டாக்டர் எமர்ஜன்ஸி ரூமில் இருந்து வெளியே வந்தார்.

''டாக்டரய்யா... வேலுச்சாமிக்கு எப்படி இருக்கு?''

கும்பல் கவலையோடு அவரை சூழ்ந்தது.

அவர்களைப் பார்த்து உதட்டைப் பிதுக்கியவர் சிநேகாவிடம் திரும்பினார்.

''நீ என்னோட ரூமுக்கு வாம்மா.''

சொல்லி விட்டு வேகமாய் நடக்க ஆரம்பித்தார்.

சிநேகா குழப்பமாய் அவர் பின்னால் சென்றாள்.

அறைக்குள் சென்று அமர்ந்த டாக்டர், கைக்கெட்டும் தூரத்தில் இருந்த பேன் சுவிட்சைத் தட்டி விட்டுக் கொண்டு அவளிடம் திரும்பினார்.

''அந்த பேஷண்ட் உனக்கு உறவா?''

''நோ டாக்டர். அவங்கல்லாம் யாரோ எனக்குத் தெரியாது. ரொம்ப சீரியசான நிலையில் இருந்ததனால இரக்கப்பட்டு என்னோட கார்ல ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வந்தேன்.''

''ஐ... ஸீ... எல்லோரும் கிராமத்து ஆசாமிங்களா இருப்பாங்க போலிருக்கு?''

''ஆமா... டாக்டர்! பஸ் வசதி கூட சரியா இல்லாத கிராமம். அதனாலதான் அவசரத்துக்கு என்னோட காரைப் பயன்படுத்திக்கிட்டாங்க.''

''கள்ளிப்பட்டிங்கற கிராமமா?''

''ஆமா டாக்டர்.''

மேலும் விவரங்கள் கேட்டார்.

சிநேகா மவுனமாய் உட்கார்ந்திருக்க, டாக்டர் தொடர்ந்து கேட்டார்.

''அங்கே ஏதாவது ஃபாக்டரி இருக்கா?''

''ஆமா டாக்டர்... அந்த ஃபாக்டரியில் ட்ரெயினிங் எடுக்கறதுக்காகத்தான் நான் அந்த வில்லேஜுக்கே வந்தேன்.''

''உடம்பின் உள்பாகங்கள் பூராவும் ரசாயனப் பொருட்களால் பலமா அரிக்கப்பட்டு சேதமடைஞ்சிருக்கு. அந்த கிராமத்தில் இருந்து வர்ற பல பேஷண்ட்டுகள் கிட்டே இந்த மாதிரி சிம்ப்டம்சை ரொம்ப நாளாவே நான் கவனிச்சிட்டு வர்றேன்.''

''யூமீன்... அந்த ஃபாக்டரிதான் இந்த ஆளின் மரணத்துக்கு காரணம்னு நினைக்கறீங்களா டாக்டர்?''

''நோ... நோ... முழுசாத் தெரிஞ்சிக்காம நான் எதையும் சொல்ல விரும்பலை. இந்த மரணத்துக்கு நெ.1 ஃபாக்டரி கழிவுகள் காரணமா இருக்கலாம். அல்லது நெ.2 பொல்யூஷன்லேர்ந்து தங்களை



எப்படிக் காத்துக்கறதுங்கற அடிப்படை பாதுகாப்பு வழிமுறைகள் பத்தின அவேர்நெஸ் அந்தக் கிராமத்து ஜனங்களுக்கு இல்லாம இருக்கலாம். நீ படிச்சவளாத் தெரிஞ்சதால இதைப்பத்தி உன்கிட்ட விளக்கமாப் பேச முடிவு செஞ்சேன். ஒருவேளை முறையான பாதுகாப்பு வழிமுறைகள் இல்லாம வாழற ஜனங்களா இருந்தாங்கன்னா உன்னை மாதிரி படிச்சவங்க அவங்களுக்கு எடுத்துச் சொல்லலாமே?''

''அங்கே இப்போதுதான் நான் காலடி எடுத்து வெச்சிருக்கேன் டாக்டர்.''

''கவனக்குறைவாலயோ, அறியாமையாலோ நிகழும் மரணங்களைத் தடுக்க வேண்டியது நம்மோட கடமை. உன்னோட ட்ரெயினிங் பீரியடில் முடிஞ்சா அந்த ஜனங்களுக்கு பொல்யூஷன் கண்ட்ரோலைப் பத்தி எடுத்துச் சொல்லிப்பாரு.''

''ஓகே டாக்டர்'' சிநேகா எழுந்தாள்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வராந்தாவுக்கு வந்தாள்.

அந்தக் கும்பல் ஆட்கள், செத்துப்போன வேலுச்சாமியின் உடம்பை ஸ்ட்ரெச்சரில் பார்த்துக் கதறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மரணம் மனசைக் கூர்மையான பிளேடைப் போல அறுத்துக் கொண்டிருக்க, காரில் அமர்ந்து இக்னிஷியனை உசுப்பினாள்.

கள்ளிப்பட்டி கிராமத்தை நோக்கி மவுனமாய் காரைச் செலுத்த ஆரம்பித்தாள்.

யோசனையோடு காரை இயக்கி வந்தவள் - குவார்ட்டர்சைத் தொட்டதும் அனிச்சையாய் பிரேக் அடித்து நிறுத்தினாள்.

குவார்ட்டர்ஸ் வாசலில் லேசான பதட்டத்தோடு நின்றிருந்தான் சந்தீப்.

பரபரப்பாய் கேட்டான்.

''எங்கே போனே சிநேகா?''

''உங்களோட கேள்விக்கு அப்புறமா பதில் சொல்றேன். மொதல்ல என் கேள்விக்கு பதில்கள் தேவை.''

''கேளு...''

''இந்த ஃபாக்டரி பத்தி விவரமா எனக்குத் தெரியணும்.''

''என்ன தெரியணும்?''

''அங்கே என்ன நடக்குது? மொட்டையா கெமிக்கல் புராடக்ட்னு சொன்னீங்க. என்ன புராடக்ட் பண்றாங்க?''

''உள்ளே நாலைஞ்சு சின்னச் சின்ன யூனிட்டுகள் இருக்கு சிநேகா. அந்த காம்பவுண்ட் ஒரு குட்டி இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் மாதிரி.''

''நாலைஞ்சு யூனிட்டுகளா?''

''ஆமா... ஒவ்வொரு யூனிட்டிலும் ஒவ்வொரு புராடக்ட் தயாராகுது. மொத்தத்தில் எல்லாமே கெமிக்கல் பேஸ்டு புராடக்ட்ஸ்.''

''என்னென்ன புராடக்ட்னு சொல்லுங்களேன். நான் தெரிஞ்சுக்கறேன்.''

''டையிங் கெமிக்கல்ஸ் ஒரு புறம் தயாராகுது. இன்னொரு யூனிட்டில் கால்ஷியம் புராடக்ட்ஸ். அப்புறம் சிக்கிமுக்குக் கல்லுன்னு சொல்வாங்களே... அதைப் பவுடர் பண்ற ப்ளாண்ட் இருக்கு. கண்ணாடியால சீல் செய்யப்பட்ட ஒரு காஸ்ட்லியான யூனிட்டுக்குள்ளே மருத்துவம் சம்பந்தமான ரசாயனங்கள் உற்பத்தியாகிட்டு இருக்கு. இந்த யூனிட் - விரிவாக்கம் சம்பந்தமாகத்தான் கன்சல்ட் பண்ண என்னைக் கூப்பிட்டிருக்காங்க.''

''ஃபாக்டரிக்கு முறையான அனுமதிகள் வாங்கியிருக்கா சந்தீப்?''

''பின்னே? முறையான அனுமதிகள் இல்லாம இவ்வளவு பெரிய ஃபாக்டரியை எப்படி நடத்த முடியும்?''

''ஃபாக்டரி கழிவுகள் எல்லாம் எங்கே டிஸ்போஸ் ஆகுது?''

''எதுக்காகக் கேக்கறே?''

''என்னோட கேள்விக்கு பதில் சொல்லுங்க ப்ளீஸ்.''

''ம்கூம்... சம்பந்தமா சம்பந்தமில்லாம நீ ஏதேதோ கேட்டுட்டுப் போறே... விஷயம் என்னான்னு தெரிஞ்சிக்காம நான் பதில் சொல்லமாட்டேன்.''

ஒரு சில விநாடி மவுனத்துக்குப்பின் சொன்னாள்.

''சீரியசான நிலைமையில் உயிருக்குப் போராடிட்டிருந்த ஒருத்தரை நம்ம கார்ல டவுன் ஆஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டுப் போயிருந்தேன்.''



''யார் அது?'' என்றான் சந்தீப் - லேசாய் முகம் மாறி.

''யாரோ உள்ளூர் ஆசாமி... பாவம் ரத்தமா வாந்தி எடுத்து மயங்கிக் கிடந்தான். ஆஸ்பிட்டல் கொண்டு போயும் ஆள் பிழைக்கலை.''

''நீ கேட்ட கேள்விகளுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?''

''டாக்டர் என்னைத் தனியா கூப்பிட்டு சொன்னார். 'இது அந்த ஊரிலிருந்து வந்த ரெண்டாவது சீரியஸ் கேஸ். அங்கிருந்து வர்ற மத்த பேஷண்ட்ஸ்கிட்டேயும் ரசாயன பாதிப்புக்கான ஆரம்ப அறிகுறிகள் தெரியுது'ன்னு சொன்னார்.''

''சரி இப்போ அதுக்கென்ன?''

''கெமிக்கல் ஃபாக்டரிதானே இதுக்கெல்லாம் காரணமா இருக்கும்?''

''சிநேகா... உனக்கெதுக்கு இந்த வீண் வேலை... வெட்டி ஆராய்ச்சி எல்லாம்? உடம்பு சரியில்லாத ஒரு ஆளை ஆஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போக உதவி பண்ணியிருக்கே... ரைட். நல்ல விஷயம். பாராட்டப்பட வேண்டிய விஷயம். அதோட நிறுத்திக்க வேண்டியதுதான். அதுதான் லிமிட். யாருக்கோ நடந்த இன்சிடென்ட்டை மனசுக்குள்ளே போட்டு போஸ்ட் மார்ட்டம் பண்ணிட்டு இருந்தா நம்ம பொழைப்பை நாம பார்க்க முடியாது. கெய்ஸர்ல வெந்நீர் ரெடி. போ... குளிச்சிட்டு வா... ஃபாக்டரி எம்.டி.கிட்டே உன்னோட ட்ரெயினிங் பத்தி இன்னிக்கே பேசி முடிவு பண்ணிடலாம்.''

''சந்தீப்...''

''நோ மோர் ப்ளடி டாக்ஸ்.''

சற்றே இறுக்கமாய்ச் சொல்லிவிட்டு இந்து பேப்பரை விரித்து அதில் புதைந்து கொண்டான் சந்தீப்.

---

3

**பி**ரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் காற்றை மாசுபடுத்தாத வகை எரி பொருளை தயாரிக்கத் திட்டமிட்டு இருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்டிருக்கும் விவர அறிக்கையின் சாராம்சம் இதோ.

''தயாரிக்கவுள்ள அந்த எரிபொருள் தாவர

அடிப்படையிலானதாய் இருக்கும். ரேப் விதைகளில் இருந்து தயாரிக்கப்படும் டை ஸ்டாக்-ம் பீட்ருட்டிலிருந்து எடுக்கப்படும் 'எதனால்'-ம் தான் எரிபொருளின் முக்கிய ரசாயனங்களாக இருக்கும். இத்தகைய எரிபொருள் கரியமில வாயுவை ($CO_2$) வெளிப்படுத்தாது. ஆகவே சுற்றுச்சூழல் பாதிப்பு இருக்காது.

பிரான்ஸ் நாட்டின் வல்லுநர்கள் தாவர அடிப்படையிலான மேற்படி எரிபொருளைத் தயாரிக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்க, நம் ஊர்க்காரர் இப்போதே தினமும் 50 லிட்டர் தயாரிக்கத் தயாராகி விட்டார்.

இதை நினைக்கிற போது மனசுக்குள் சந்தோஷம் மூலிகைப் பெட்ரோலாய்ப் பற்றியெறிகிறது இல்லையா?

---

சந்தீப்பும், சிநேகாவும் தொழிற்சாலையில் பிரம்மாண்டமான கிராதி கேட் வழியே பிரவேசமானார்கள்.

விஸ்தாரமான இடப்பரப்பை ஃபாக்டரி ஆக்ரமித்திருந்தது. தூரத்தில் புகை போக்கிகளோடு யூனிட் கட்டிடங்கள் தெரிய, ஓர் ஓரத்தில் சந்தடியில்லாமல் ஒதுங்கி கேக் துண்டம் மாதிரி நின்றிருந்தது அலுவலகம்.

போர்டிகோவினுள் புகுந்தார்கள். வளைந்து செல்லும் மாடிப்படியில் ஏறி முதல் தளத்தைத் தொட்டதும் வராந்தாவிலிருந்த குஷன் சோபாவைக் காட்டினான் சந்தீப்.

''ஒரு நிமிஷம் உக்காரு சிநேகா. நான் எம்.டி.யைப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''நான் வர வேண்டியதில்லையா...?''

''அவர் உன்னைப் பார்க்க விரும்பினா நான் கூப்பிடறேன்.''

அந்தக் கதவுக்குள் மறைந்தான் சந்தீப்.

சிநேகா சோபாவில் அமர்ந்தாள்.

சோபாவுக்கருகே இருந்த குட்டி டீபாயில் ஆங்கிலப் புத்தகங்களும், நாளிதழ்களும் வார்னீஷ் அட்டைகளோடு மின்னின.

டேப்பளாயிட் சைசிலிருந்த பிசினஸ்



ட்ரேண்ட்ஸ் பத்திரிகைத் தாள்களைப் புரட்ட ஆரம்பித்தாள்.

எத்தனை நேரம்?

யாரோ தன்னையே பார்ப்பது போல உணர்வு ஏற்பட்டு சட்டென நிமிர்ந்தாள்.

சற்றுத்தள்ளி வராந்தா திருப்பத்தில் அந்த இளைஞன் தெரிந்தான்.

சதைப் பிடிப்பில்லாத உடம்போடிருந்தான். தொளதொளப்பாய்ப் பேண்ட், சர்ட். கண்களில் மட்டும் அதீத வெளிச்சம்.

சிநேகா அவனை நிமிர்ந்து பார்த்ததும் சுதாரித்து மெல்ல அவளை நோக்கி நடந்து வந்தான்.

அருகில் வந்ததும் காற்றை வெட்டுகிற மாதிரியான குரலில் கேட்டான்.

''சந்தீப்புக்கு நீங்க என்ன வேணும்?''

''நீங்க யாரு...?''

அவள் குறுக்கே கேள்வி கேட்டதும் ஒரு விநாடி மவுனமாகி விட்டு பிறகு சொன்னான்.

''நான் இங்கே சூபர்வைஸராக இருக்கேன். எம் பேர் கதிரேசன்.''

''சந்தீப்பை உங்களுக்குத் தெரியுமா?''

''நல்லாத் தெரியும்.''

''அவர் உங்களுக்கு ஃப்ரெண்டா...?''

சிரித்துக் கொண்டே சொன்னான்.

''இல்லை. சந்தீப் எனக்கு எதிரி.''

லேசாய் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சிநேகா.

அவன் முகத்திலிருந்த புன்னகையைப் பார்த்து விட்டு தானும் புன்னகைக்க முயன்றாள்.

''ஜோக் அடிக்கறீங்களா?''

அவன் தலையாட்டி மறுத்தான்.

''இல்லேம்மா. என்னோட உதட்டில்தான் சிரிப்பு இருக்கு. மனசுல வெப்பம்.''

அவளுக்குள் குழப்பம் நங்கூரம் இடத் துவங்கியது.

''உங்க பேச்சு புதிரா இருக்கு.... உங்க ரெண்டு பேருக்கும் இடையில் அபீஷியல் கிளாஷஸ் இருக்கா?''

''ம்கூம்... எனக்கும் சந்தீப்புக்கும் நேரடியா எந்தத் தொடர்பும் இல்லை. சொல்லப் போனா என்கூட சந்தீப் பேசினதே இல்லை.''

''அப்புறம் எதனால அவரை எதிரின்னு சொல்றீங்க?''

''அதை இப்போ விவரமா என்னால சொல்ல முடியாது. இப்போ நான் வந்த விஷயத்தை மட்டும் சொல்லிடறேன். மொதல்ல உனக்கு நன்றி சொல்லணும்.''

''எதுக்கு நன்றி?''

''பணக்கார ஜாதிக்கே உரிய அலட்சியத்தையும், திமிரையும் காமிக்காம- கேட்டதும் உதவி செஞ்சியே... அந்த நல்ல குணத்துக்காக...''

''உ... உங்களுக்கு நான் எப்ப உதவி செஞ்சேன்?''

''ரத்த வாந்தி எடுத்து மயக்கமாயிட்ட வேலுச்சாமியை ஆஸ்பத்திரிக்குக் கார்ல கூட்டிட்டுப் போனியே... அதுக்காகத்தான் நன்றி சொன்னேன்.''

''அவர் உங்களுக்கு வேண்டியவரா?''

''இந்த ஃபாக்டரில தான் அவன் வேலை பார்த்தான்.''

''நான் ஆஸ்பத்திரில டிராப் பண்ணியும் பிரயோஜனமில்லாமப் போச்சு. பாவம் செத்துட்டார்.''

''இது ரெண்டாவது சாவு. இன்னும் நிறைய விழும்.''

சொன்னவனைக் கூர்மையாய்ப் பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க?''

''எங்கள்ல ஒருத்தருக்கு நெஞ்சில் ஈரத்தோட நீ உதவி செய்ததால நான் உனக்கு உரிமையோட அட்வைஸ் பண்ண வந்திருக்கேன். இந்த ஃபாக்டரி உனக்கு வேண்டாம். இந்த ஃபாக்டரியில் இருக்கிற சில பிளாண்ட்டுகளில் ஒரு மாசம்கூட வேண்டாம்- ஒரு வாரம் வேலை செஞ்சாப் போதும். உடம்புக்குள் விஷம் முகாம் போட்டுடும்.''

அவள் ஏதோ சொல்ல வந்த விநாடி எம்.டி. அறையின் கதவு திறக்கற சப்தம் கேட்டது.

கதிரேசன் அவசரமாய் விடைபெற்றான்.

''சந்தீப் வர்ற மாதிரி தெரியுது. ஊதற சங்கை ஊதிட்டேன். அப்புறம் உன்னோட இஷ்டம்.''

எதிர்திசையில் வேகமாய் செல்ல ஆரம்பித்தான்.

இந்தப் பக்கம் சந்தீப் பாதி திறந்த கதவில் எட்டிப் பார்த்தான். கூப்பிட்டான்.

''சிநேகா...''



அவள் எழுந்தாள்.

''எம்.டி.கிட்டே பேசினீங்களா?''

''பேசிட்டேன்.''

''என்ன சொன்னார்?''

''ஹி ஈஸ் காலிங் யூ... உன்கிட்ட பேசணுமாம்.''

குளிரூட்டப்பட்ட அந்த அறைக்குள் அவளும் நுழைந்தாள்.

மேனேஜிங் டைரக்டர் ப்ரமோத் அவள் எதிர்பார்த்ததை விடக் குறைச்சலான வயதில் தோன்றினான். சாம்பல் நிற சூட் தரித்திருந்தான். சன்னமான பிரேமில் கண்ணாடி அணிந்திருந்தான்.

விஷ் பண்ணினாள்.

பதிலுக்கு தலையசைத்த ப்ரமோத் இருக்கையைக் காட்டி விட்டு சொன்னான்.

''இம்ப்ளாண்ட் ட்ரெயினிங் ஆப்பர்ச்சூனிட்டி வேணும்னு நீங்க இங்கே வந்திருக்கறதா சந்தீப் சொன்னார்.''

''ஆமாம் சார்.''

''ஆனா ஸ்டூடண்ட் ட்ரெயினீசை அலவ் பண்றதில்லைங்கறதை நாங்க ஒரு பாலிசியாவே வெச்சிருக்கோம்.''

லேசாய் ஏமாற்றம் பரவ நிமிர்ந்தாள்.

''சார்... அப்போ...''

அவன் புன்னகைத்தான்.

''நோ... நோ... உடனே டிசப்பாயிண்ட் ஆக வேண்டாம். நான் இன்னும் முழுசா சொல்லி முடிக்கலை. அந்த பாலிசியை சந்தீப்புக்காக விட்டுக் கொடுக்கறோம். அதுவும் நீங்க அவரோட உட்பீன்னு தெரிஞ்ச பிறகு பாலிசி அது இதுன்னு சொல்லி எங்களால தட்டிக் கழிக்கவே முடியாது. உங்க மேரேஜுக்கும், ட்ரெயினிங்கை சிறப்பாக முடிக்கறதுக்குமா சேர்த்து என்னோட அட்வான்ஸ் கங்கிராஜுலேஷன்ஸ்.''

''தாங்க்யூ சார்... நான் நாளையிலிருந்து ட்ரெயினிங்ல ஜாயின் பண்ணிக்கலாமா?''

''அதைப்பத்திப் பேசத்தான் கூப்பிட்டேன். நாளைக்கு வேண்டாம். இந்த வாரம் பூரா நாங்க பிசியா இருப்போம். நாளைலர்ந்து நாலு நாளுக்கு ஃபாக்டரி இன்ஸ்பெக்ஷன். அதெல்லாம் முடியட்டும். ஃபோர் டேஸ் கழிச்சி வந்துடுங்க.

ஓ.கே.?''

தலையசைத்தாள்.

''ஓக்கே சார்...''

சந்தீப் ப்ரமோத்திடம் திரும்பினான்.

''மிஸ்டர் ப்ரமோத்... அப்போ நாம ப்ராஜெக்ட் டிஸ்கஷனை நாளைக்குக் காலைல வெச்சிக்கலாமா?''

தலையசைத்து விடை கொடுத்தான் ப்ரமோத்.

சந்தீப்பும் சிநேகாவும் அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள். படிகளில் கீழே சரிந்து பேஸ்மெண்டில் நடக்கிற போது சிநேகா பேச்சை ஆரம்பித்தாள்.

''சந்தீப்... அந்த வேலுச்சாமி இங்கே வேலை பார்த்த ஆள் போலிருக்கு.''

''எந்த வேலுச்சாமி?''

''நான் கார்ல கூட்டிட்டுப் போய் ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணினேனே... அந்த வேலுச்சாமி செத்துப் போனதுக்கு இந்த ஃபாக்டரியின் பொல்யூஷன்தான் காரணம்னு தெரியுது. ஒரு உயிர் அநியாயமா செத்துப் போனதைப் பத்திப் பேசறேன். இதைப் பத்திப் பேசறதுக்கு அறிவு தேவையில்லை. மனிதாபிமானமும், நெஞ்சில் கொஞ்சம் ஈரமும் இருந்தாப் போதும் சந்தீப்.''

சிநேகா சற்று காரமான குரலில் படபடத்தாள்.

''சிநேகா... அது அவன் விதி. இல்லாத பாட்டுக்கு அவன் இந்த ஃபாக்டரில வந்து வேலை பார்க்கறான். அதுக்காக நாம என்ன செய்ய முடியும்? யாரோ ஒருத்தனுக்காக நாம ரெண்டு பேரும் ஏன் மூடை ஸ்பாயில் பண்ணிக்கணும்?''

''அப்ப ஒத்துக்கறீங்களா? அவனோட சாவுக்கு அவன் வேலை பார்த்த பிளாண்ட்தான் காரணமா இருக்கணும்கறதை ஒத்துக்கறீங்களா?''

அரைகுறையாய் தலையசைத்தான் சந்தீப்.

''இட் மே பீ...''

''டோண்ட் ஸே இட் மே பி... இட் ஷுட் பி...ன்னு சொல்லுங்க.''

''சரி இப்போ அதுக்கு என்ன?''

''இப்படிப்பட்ட பிளாண்ட்டில் உங்களோட வருங்கால மனைவியைக் கூட்டிக் கொண்டு வந்து விட உங்களுக்கெப்படி மனசு வந்தது?''



''அர்த்தமில்லாமப் பேசாதே சிநேகா.''

''அர்த்தம் தெரியாமத்தான் பேசறேன். நீங்க விளக்கிச் சொன்னா புரிஞ்சிக்கறேன்.''

''உடல் நிலையைப் பாதிக்கக்கூடிய சில செக்ஷன்ஸ் உள்ளே இருக்கறது வாஸ்தவம்தான். அங்கெல்லாம் உன்னை நான் அனுப்பவே மாட்டேன். இங்கே மத்த செக்ஷன்கள்ல தெரிஞ்சிக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. அதையெல்லாம் நீ தெரிஞ்சுக்கிட்டாப் போதும்.''

''அப்போ அந்த செக்ஷன்கள்ல இருக்கறவங்க எல்லாம் மனுஷங்களே இல்லையா?''

''நான்தான் அப்பவே சொன்னேனே. அங்கே வேலை செய்யறவனோட தலையெழுத்து அது.''

''இது பொறுப்புள்ள பேச்சா இல்லை சந்தீப்.''

''சில உற்பத்திகளில் சில தியாகங்கள் இருக்கத்தான் செய்யும்.''

''அடுத்தவன் உயிரை உறிஞ்சிகிட்டு அதுக்குத் தியாகம்னு நீங்களே பட்டம் குடுத்துக்கறீங்களா? வெல் சந்தீப்.''

''ஏய்... என்ன நீ லேபர் யூனியன் லீடர் மாதிரிப் பேசிட்டிருக்கே. எம்.டி. காதுல இதெல்லாம் விழுந்ததுன்னா உன்னை மொத வேலையா பெட்டி கட்டச் சொல்லிடுவார்.''

''நானே கட்டிரலாம்னுதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன் சந்தீப்.''

''சிநேகா... டோண்ட் பீ இடியாட்டிக். தயவு செஞ்சு வேற எதையாச்சும் பேசு.''

''விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிடுச்சு. மனுஷங்க வேலை பார்க்க முடியாத ஆபத்தான இடங்களில் ரோபோட்சைப் பயன்படுத்தலாம். அந்த பிளாண்ட்சை ஆட்டோமைஸ் பண்ணலாம்.''

''ஏட்டுச் சுரைக்காய்ங்கறதை ப்ரூப் பண்றே. எல்லாம் சரிதான். அந்த மாதிரி பிளாண்ட் ஆட்டோமேஷனுக்கு பல லட்சங்கள் செலவாகும். இங்கே தினமும் இருபத்தஞ்சோ, நாற்பதோ கூலி குடுத்தா போட்டி போட்டுட்டு லேபர்கள் ஓடி வருவாங்க. மூலதனம் போட்டு தொழில் நடத்தறவன் எதைத் தேர்ந்தெடுப்பான்? காசைப் போட்டு பிசினஸ் பண்றவனுக்குத்தான் இதெல்லாம்

புரியும்.''

''சந்தீப்... அதுக்காக அடுத்தவன் பிணத்து மேல ஏறி உக்காந்து சம்பாதிக்கற சம்பாதிப்பெல்லாம் ஒரு பிழைப்பா சொல்லுங்க.''

''இங்கே பார் சிநேகா.... சித்தாந்தம் வேதாந்தமெல்லாம் பேசிட்டிருக்க எனக்கு பொறுமை கிடையாது. எம்.டி. உன்னை நாலு நாள் கழிச்சி வரச் சொல்லியிருக்கார். அந்த நாலு நாளில் யோசி. இந்த நல்ல ட்ரெயினிங் ஆப்பர்ச்சுனிட்டி உனக்கு வேணுமா வேணாமான்னு நீ முடிவு பண்ணு. உன்னோட முடிவைச் சொல்லு. ட்ரெயினிங் எடுக்கறதுங்கற முடிவுக்கு வந்தின்னா நோ ப்ராப்ளம். இல்லை எதிர்மாறா உன் முடிவு இருந்தா... நானே உன்னை ஊரில் கொண்டு போய் விட்டுட்டு வந்துடறேன். போதுமா? நமக்குள்ளே எதுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைக்காக ஆர்க்யூமெண்ட்ஸ்.''

சந்தீப் தற்காலிகமாய் அவள் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தான்.

---

**கூ**டலைப் புரட்டும் கூவம் நதியை ஒரு கங்கையாகவோ காவிரியாகவோ மாற்ற முடியும் என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? கற்பனையல்ல. நூற்றுக்கு நூறு சாத்தியமுள்ள உண்மைதான் அது என்று விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

துர்வாசனை வீசும் அத்தகைய சாக்கடைகளையும் கழிவுகளையும் நுண்கிருமிகளைப் பயன்படுத்தி சுத்திகரிக்க முடியும் என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

ஜவஹர்லால் நேரு சர்வகலாசாலையில் உள்ள ஸ்கூல் ஆப் லைப் சயன்ஸ்– ன் நுண்கிருமி இலாகாவினர் கழிவுகளைத் தின்னும் நுண் கிருமிகளை உற்பத்தி செய்வதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பது பழமொழி. கிருமியைக் கிருமியால் அழிக்க வேண்டும் என்பது புதுமொழி.

---



**கா**ம்ப்பாக்ட் டிஸ்க் பிளேயர் புத்தம்புது பூமி வேண்டும்... என்று டிஜிட்டலில் இழைந்தபோது நேரம் காலை பத்து இருபத்தைந்து.

சிநேகா ப்ரெட் டோஸ்டை கொறித்து விட்டு நாப்கினால் கையைத் துடைத்த போது வாசல்புறத்தில் நிழலாடியது.

ஊதா நிறத்தில் காட்டன் புடவை உடுத்தியிருந்த அந்தப் பெண் தயக்கமாய் கதவு நிலைக்கருகே தெரிந்தாள். தலையை வழித்து சீவி இறுக்கமாய்ப் பின்னியிருந்தாள். அடர்த்தியான பின்னல் மார்பில் விழுந்தது. முகத்தில் கிராமியத்தனத்தோடு படிப்பின் வெளிச்சமும் வீசியது.

''என்ன வேணும்? யாரு நீ?''

சிநேகா கேட்டதும் ஈர்க்கும் புன்னகை ஒன்றை வெளியிட்டாள் அவள்.

''உங்களைத்தான் பார்க்க வந்தேன்!''

''என்னையா? எதுக்கு?''

அவளுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல் ''உள்ளே வரலாமா?'' என்றாள்.

மெல்ல உள்ளே வந்தவள் சுற்றுமுற்றும் பார்த்தபடியே தொடர்ந்து கேட்டாள்.

''சந்தீப் போயிட்டாரா?''

''அவர் ஃபாக்டரிக்கு போயிட்டார்... நீ யாரு? அதை மொதல்ல சொல்லு!''

''அவர் இல்லாத நேரமாப் போய்ப் பாருன்னு கதிரேசன் சொல்லி அனுப்பினார். சந்தீப் ஃபாக்டரிக்கு போயிருப்பாரா மாட்டாரான்னு சந்தேகத்தோடவே வந்தேன்.''

''கதிரேசன் அனுப்பினாரா?''

''ஆமா...''

''அவர்க்கு நீ என்ன ஆகணும்?''

''என் வீட்டுக்கு நேர் பின்னாலதான் அவரோட வீடு இருக்கு. அவர் எனக்கு நல்ல நண்பர்.''

''ஆச்சர்யமா இருக்கே. இந்தப் பொட்டல்காட்டில் இவ்வளவு மெச்சூரிட்டியான ஆட்கள் இருப்பாங்கன்னு நான் நினைச்சே பார்க்கலை.''

அவள் சிரித்தாள்.

''இங்கே என்னையும் கதிரேசனையும் தவிர மீதிப் பேரெல்லாம் அக்மார்க் குத்தின கிராமத்துப் பேர் வழிகள்... நானும் அவரும் அதிர்ஷ்டவசமா டவுன்ல

போய் காலேஜ் வரைக்கும் படிச்சதனால கொஞ்சம் சிந்திக்கத் தெரிஞ்சவங்களா இருக்கோம்.''

''உன் பேரென்ன?''

''வாசகி...''

''கதிரேசன் என்னை ரொம்பவும் பயமுறுத்திட்டுப் போனார்.''

''என்னன்னு?''

''அந்த ஃபாக்டரில வேலை செய்யறது ரொம்ப ஆபத்தான விஷயம்கற மாதிரி சொன்னார்.''

''நிஜந்தாங்க. முந்தியே ஒரு ட்ரெய்னீ பாதி ட்ரெயினிங்ல ஓடிப்போயிட்டார். அதுக்கப்புறம் ட்ரெயினீசை எடுக்கறதில்லை. உங்களை எடுத்துக்கறேன்னு சொல்லிட்டாங்களா?''

''திங்கட்கிழமைல இருந்து வரச் சொல்லியிருக்காங்க.''

வாசுகி கவலையோடு அவளைப் பார்த்தாள்.

''வேண்டாங்க. படிக்காத கிராமத்து ஜனங்கதான் அவங்க வலைல தெரியாம விழுந்துட்டிருக்காங்க. நீங்களும் ஏன் அங்கே போய் வியாதியை விலை கொடுத்து வாங்கணும்? நெஞ்சில் ஈரத்தோட எங்க கிராமத்தை சேர்ந்த ஒருத்தருக்கு உதவினதாலயே எங்களுக்கு உங்க மேல ஒரு ஈடுபாடு வந்துடுச்சு. அதனாலதான் வலிய வந்து சொல்றேன்.''

சிநேகா அவளை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டாள்.

''கதிரேசன் நான் அங்கே ட்ரெயினிங் எடுக்க வேண்டாம்னு எச்சரிக்கை பண்றார்... ஆனா அவரே அங்கே வேலை பார்க்கறாரே?''

''அது... வந்து...''

அவள் லேசான தயக்கத்தோடு எச்சில் விழுங்கினாள்.

''என்னோட கேள்விக்கு உன்னால பதில் சொல்ல முடியலையே?''

''பதில் சொல்ல முடியும்.''

''அப்புறம் ஏன் மவுனம் சாதிக்கறே?''

''நீங்க மேனேஜ்மெண்டுக்கு வேண்டிய ஆளு.''

''அப்படியெல்லாம் இல்லை. நீ சொல்ற விஷயத்தை நான் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன். சந்தீப்கிட்டே கூட சொல்ல மாட்டேன். கதிரேசன் என்கிட்டே வந்து பேசினதைக் கூட நான்



அவர்கிட்டே சொல்லலையே... சொல்லியிருந்தா கதிரேசன் வேலைக்கேகூட அவர் உலை வெச்சிருப்பார்.''

''ஏதோ ஒரு நம்பிக்கையில் அந்தப் பொண்ணுகிட்டே வெளிப்படையாய் பேசிட்டேன். சந்தீப் கூட வந்தவள்ங்கற தயக்கம் கூட இல்லாம பேசிட்டு வந்துட்டேன் அப்படின்னு கதிரேசன் சொன்னார். அவருக்கு வேலை போறதைப் பத்திக் கவலை இல்லை. ஆனா குறைந்தபட்சம் இன்னும் ஒரு மாசத்துக்காவது அங்கே இருக்க விரும்புறார்.''

''புரியலையே... பிடிக்காத இடத்தில் எதுக்காக இருக்கணும்?''

''அந்த ஃபாக்டரியால இன்னும் ஒரு சில வருஷங்களுக்குள்ளே இந்த கிராமமே பாழாயிடும்ங்கறதில் எந்த சந்தேகமும் இல்லை. பச்சையா இருந்த செடி, கொடிகளெல்லாம் இப்பவே லேசா வெளிற ஆரம்பிச்சிடுச்சு. இங்கே வாழ்ற ஜனங்களின் உடல்நிலையும் கொஞ்சம் கொஞ்சமா பாதிக்க ஆரம்பிச்சிருக்கு... இதனோட விளைவுகளையெல்லாம் இந்த ஜனங்கள் இப்ப உணர மாட்டாங்க... இன்னும் நாலைஞ்சு வருஷங்கள் கழிச்சித்தான் உணர்வாங்க. அப்போ அது கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமாத்தான் இருக்கும்.''

''நீ சொல்ற விஷயங்களுக்கும் கதிரேசன் உள்ளே வேலை பார்க்கறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''ஜனங்களுக்கு இந்த ஃபாக்டரியால ஏற்படும் எதிர்கால விளைவுகளைப் பத்தின விழிப்புணர்ச்சியை இப்பவே ஏற்படுத்தணும். அவங்களோட ஆதரவைத் திரட்டிக்கிட்டு ஃபாக்டரியை மூடச் சொல்லி அரசாங்கத்துக்கும் ப்ரஷர் தரணும். இதெல்லாம் எங்க திட்டம். அரசாங்கத்திடம் பேசறதுக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் தேவை. அதனால தான் உள்ளே என்னென்ன முறைகேடுகள் நடக்குது... பிளாண்ட் ப்ராஸஸ் என்ன...? கழிவுகளை எப்படி டிஸ்போஸ் பண்றாங்க...? இதையெல்லாம் ஸ்டடி பண்றதுக்காகவே கதிரேசன் உள்ளே போனார்.''

''இந்த ஃபாக்டரியோட பாதிப்பு அவ்வளவு தீவிரமா இருக்குமா?''

''என்ன இப்படிக் கேக்கறீங்க? இப்போ என் கூட வர முடியுமா?''

''எங்கே?''

''வாங்களேன்... கிராமத்துக்குள்ளேதான் போகப் போறோம்.''

விநாடி நேரம் யோசித்தவள் தலையசைத்தாள்.

''ஒரு நிமிஷம்... டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வர்றேன்.'' ஆரஞ்சு நிற சல்வார்கமீசுக்கு மாறி வந்தாள் சிநேகா. குவார்ட்டர்சை விட்டு வெளியே வந்தார்கள். பூட்டை மாட்டினாள் சிநேகா.

''அவர் எப்போ வருவார்?''

''சந்தீப் வர லேட்டாகும். காலைல போனா திரும்பி வர சாயந்தரம் ஏழு மணிக்கு மேலாகும்.''

''உங்களை சத்தம் போடுவாரா?''

''எதுக்கு?''

.''என் கூட இப்படி வெளியே வர்றதுக்கு?''

''நான் என்ன அவரோட ரிமாண்ட்லயா இருக்கேன்?''

சிநேகா சிரித்துக் கொண்டே பூட்டை இழுத்துப் பார்த்து விட்டு அவளுடன் நடந்தாள்.

குவார்ட்டர்ஸ் பகுதியை சுற்றிக் கொண்டு பின்னால் கூட்டி வந்தாள் வாசுகி.

சலசலவென்று சப்தம் கேட்டது. சிநேகா நிமிர்ந்து பார்த்தாள்.

சற்றுத் தொலைவில் சூரிய ஒளியில் வெள்ளித் தகடாய்ப் பளபளத்தபடி ஆறு ஓடிக் கொண்டிருந்தது.

''சந்தீப் சொன்னார்... ஃபாக்டரிக்கு பின்னால ஆறு ஓடிட்டிருக்குன்னு. இவ்வளவு தண்ணி இருக்கா?''

சிநேகா ஆச்சரியத்தோடு கேட்டபடியே ஆற்று நீரை வேகமாய் நெருங்கினாள்.

''ஃபாக்டரியோட முதல் பலி இந்த ஆறுதான்.''

''என்ன சொல்றே?''

அவள் ஆற்றோரமாய் சற்று தூரம் கூட்டிப் போய் அந்த நாணல் புதர்களை விலக்கிக் காட்டினாள்.

அங்கே கறுப்பாய்க் குழாய்.

''என்ன இது?''

''ஃபாக்டரி கழிவு... இங்கேதான் டிஸ்போஸ் ஆகுது.''



சொல்லிக் கொண்டே கரையோர மணலை லேசாகத் தோண்டினாள்.

ஒரு அடி ஆழத்திற்கு குழி பறித்தபோது நீர் வெளிப்பட்டது. வெளிப்பட்ட நீரைக் கொஞ்சமாய் கையில் மொண்டு சிநேகாவிடம் நீட்டினாள்.

''இதைப் பார்த்தீங்களா?''

தண்ணீர் இளஞ்சிவப்பு நிறத்தில் ரசாயனங்களோடு உறவாடிக் கொண்டிருந்தது.

பதறினாள் சிநேகா.

''மைகாட்''

''ஸ்மெல் பண்ணிப் பாருங்களேன்.''

பார்த்தாள். நாற்றம்...

''ஆத்துத் தண்ணியைப் பார்க்கிறப்போ தெளிவாத்தானே இருக்கு?''

''இந்த ரசாயனக் கழிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக கலந்துட்டிருக்கு. அதனால மேலோட்டமாப் பார்க்கிறப்போ தெரியாது. விளைவுகள் பின்னாலதான் தெரியும்.''

''எப்படி இவ்வளவு தைரியமா இந்த செஞ்சிட்டிருக்காங்க?''

''ரெண்டு தைரியம். ஒண்ணு இந்த ஜனங்களுக்கு அவ்வளவா நாலெட்ஜ் கிடையாது. சுலபமா அவங்களை ஏமாத்தலாம். எதையும் தட்டிக் கழிக்க மாட்டாங்க. ரெண்டாவது அரசாங்கத்தின் ஊழல் பிரிவுகள்... கொஞ்சம் பணத்தைக் கண்ணுல காமிச்சா எந்த விதி மீறலையும் காம்பர்மைஸ் பண்ணிக்கத் தயாரா இருக்கற அதிகாரிகள். தண்ணியால ஏற்படற பாதிப்பு ஒரு பக்கம்னா அந்த ஃபாக்டரி வெளியிடற ரசாயனப் புகை பச்சைப் பயிர்களை என்ன பாடு படுத்துது பாருங்களேன்.''

விளைந்திருந்த பயிர்ச்செடிகளின் இலைகளை கிள்ளிக் காட்டினாள். இலைகளின் மேல் மெல்லிய செம்பழுப்பாய் ஒரு படலம் கோர்த்திருந்தது.

''இன்னும் கொஞ்ச நாளில் இந்த கிராமத்தில் பச்சை செடியையே கண்ணில் பார்க்க முடியாது. இந்த செம்பழுப்புதான் திரும்பின பக்கமெல்லாம் தட்டுப்படும். இப்படி விளைஞ்ச தானியங்களை சாப்பிட்டு வளர்ற தலைமுறை எப்படி இருக்கும்.. கற்பனை பண்ணிப் பாருங்களேன்.''

சிநேகா நிஜமான கவலையோடு சொன்னாள்.

''ஒரு பக்கம் சுவாசிக்கற காத்தில் மாசு... இன்னொரு பக்கம் விளையற பயிர்கள் மூலமா உணவுப் பொருளில் ரசாயனம்... குடிக்கற தண்ணியிலும் ரசாயனம்... மும்முனைத் தாக்குதலா இருக்கும் போலிருக்கே?''

''ஆமா... இந்த கிராமம் கூடிய சீக்கிரமே இன்னொரு போபாலா மாறுறதுக்கு எல்லா சாத்தியங்களும் இருக்கு. போபால்ல இப்போ குடிக்கறதுக்கோ, சமைக்கறதுக்கோ தண்ணியே இல்லையாம். எங்கே தோண்டினாலும் கெமிக்கல்தானாம். அந்த அளவுக்கு நிலைமை முத்திப் போறதுக்கு முந்தி இதைத் தடுத்தாகணும்.''

லேசாய் ஆவேசத்தோடும், ஆதங்கத்தோடும் சொன்னாள் வாசுகி.

அவளை நேராகப் பார்த்துக் கேட்டாள் சிநேகா.

''எல்லாம் சரி... அதுக்காக இதுவரைக்கும் என்ன முயற்சி செஞ்சீங்க?''

வாசுகியின் முகம் மெலிதான சோகத்துக்குப் போயிற்று.

''இந்த ஊர் ஜனங்களுக்கு ஃபாக்டரியால எதிர்காலத்தில் ஏற்படப்போற விபரீதங்கள் பத்தி எடுத்துச் சொல்ல முயற்சி செஞ்சோம். ஆனா யாருமே எங்க பேச்சை புரிஞ்சிக்க மாட்டேங்கறாங்க.''

''ஏன்?''

''உள்ளூர் ஆட்களான எங்களைக் கண்டா இளப்பம். நாங்க சொல்லுற விஷயங்களில் அவங்களுக்கு அவ்வளவா நம்பிக்கை இல்லை.''

''அவங்களுக்குப் புரியும்படியா நீங்க விளக்கமா சொல்லலையோ என்னவோ?''

''அதெல்லாம் இல்லை. கிளிப்பிள்ளைக்கு சொல்றமாதிரித் தெளிவா சொல்லிட்டோம். ஆனா டவுன் ஆட்களைப் பார்த்து பிரமிச்சுப் போய் நிக்கறாங்க. நாங்க சொல்றது எதுவும் அவங்களுக்கு ஏறுவதில்லை. பெரிய பெரிய கட்டிடங்கள் கிராமத்துக்கு வந்திருக்கற மயக்கத்தில் இருக்காங்க. பருவமழை பொய்ச்சுப் போனா விவசாயம் படுத்துடும். ஃபாக்டரி இருந்தா வேலைக்கோ, கூலிக்கோ தட்டுப்பாடு இருக்காதுன்னு புதுசா நம்ப ஆரம்பிச்சிருக்காங்க. ஃபாக்டரில கூலி அதிகமாக



கிடைக்கறதால ஃபாக்டரிக்கு விரோதமா பேச யாரும் தயாராயில்லை.''

''ஜனங்க பொதுவா மந்தை ஆடுகள் மாதிரி. ஒரு பத்துப் பேர் உங்க பக்கம் வந்தா அவங்களைப் பார்த்து முப்பது பேர் பின்னால வருவாங்க.''

''கரெக்ட். அந்த நம்பிக்கையில்தான், அடுத்த கட்டமா செய்ய வேண்டியதைப் பத்தி யோசிச்சிட்டிருக்கோம்.''

''என்ன செய்யப் போறீங்க?''

''கதிரேசன் ஃபாக்டரி சமாச்சாரங்களை முழுசா ஸ்டடி பண்ணிட்டு வந்த பிறகு கவர்மெண்ட்டோட மோதப் போறோம்.''

சிநேகா உதடுகளைப் பிரித்துப் புன்னகைத்தாள்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''ஆள்பலம் இல்லாம கவர்மெண்ட்டோட மோதிப் பார்க்க முடியாது.''

''புள்ளி விவரங்களோட போனா?''

''ஊகூம்... அரசாங்க அதிகாரிகள் வெள்ளம் தலைக்கு மேல போறவரைக்கும் அசைஞ்சே குடுக்க மாட்டாங்க. ஒண்ணு- செல்வாக்கோட மோதணும்; அல்லது ஆள்பலத்தை திரட்டிட்டு எதிர்ப்பை வெளியிட ஆரம்பிக்கணும்.''

''ஆள்பலத்தை எப்படித் திரட்டறதுன்னுதான் தெரியலை. ஃபாக்டரி நிர்வாகத்தை எதிர்த்து கடுமையாகப் போராட நானும் கதிரேசனும் தயாரா இருக்கோம். ஆனா எங்களுக்கு சரியான வழி முறைகள் தான் தெரியலை.''

''என்ன செஞ்சா இந்த ஜனங்க உங்க வழிக்கு வருவாங்கன்னு எனக்குத் தெரியும். வழிமுறையை நான் சொல்லித் தர்றேன்.''

சொன்ன சிநேகாவை நன்றி மிளிரும் கண்களால் பார்த்தாள் வாசுகி.

அதே விநாடி அவர்களை ஒரு ஜீப் டீசல் மணத்தோடு கடந்தது. பத்தடி தூரம் கூடப் போயிருக்காது. சட்டென வேகம் குறைந்தது. உள்ளிருந்து சந்தீப் எட்டிப் பார்த்தான். அவன் சிநேகாவைப் பார்த்த பார்வையில் நிறைய கோபம் தளும்பியிருந்தது.

சந்தீப்பை பார்த்ததும் ''ஹாய் சந்தீப்'' என்றாள்

சிநேகா இயல்பாய்.

அவனிடம் எந்த ரியாக்ஷனும் இல்லை.

சிநேகா வாசுகியிடம் திரும்பினாள்.

"ஒரு நிமிஷம் வாசுகி"

சொல்லி விட்டு சற்றுத் தள்ளி நின்றிருந்த ஜீப்பை நோக்கி வேகமாய் நடந்தாள்.

"சந்தீப்... எங்கே இந்த பக்கம்?"

"எனக்கு சர்வே அது இதுன்னு ஆயிரம் வேலை... நான் கேக்க வேண்டிய கேள்வியை நீ என்னைப் பார்த்துக் கேக்கறியே?"

சிரித்தாள் சிநேகா.

"குவார்ட்டர்சுக்குள்ளே எத்தனை நேரம்தான் அடைஞ்சே கிடக்கறது? அதனாலதான் வெளியே கிளம்பினேன்."

சொல்லிக் கொண்டே ஜீப்பின் உள்ளே பார்வையைப் போட்ட போதுதான் சந்தீப்புக்கு பக்கத்து இருக்கையில் ஃபாக்டரி எம்.டி. ப்ரமோத் உட்கார்ந்திருப்பதை கவனித்தாள்.

"ஹலோ சார்."

விஷ் பண்ணினவளுக்கு மெலிதாய் தலையசைத்து விட்டு வேறெந்த சலனமும் காட்டாமல் அமைதியாய் உட்கார்ந்திருந்தான் ப்ரமோத்.

சந்தீப் தொடர்ந்து படபடக்கிற குரலில் கேட்டான்.

"அந்தப் பொண்ணை எங்கே பிடிச்சே?"

"அவ குவார்ட்டர்சுக்கு வந்தா."

"அவளை உனக்கெப்படித் தெரியும்?"

"நேருக்கு நேரா ஒரு நிமிஷம் பார்த்தா தெரிஞ்சவங்களாயிடறாங்க. பொண்ணுங்க நாங்க சீக்கிரமா ஒட்டிக்குவோம்."

"மொதல்ல நீ குவார்ட்டர்சுக்கு போய்ச் சேரு"

"ஏன் சந்தீப்... இப்ப என்ன ஆயிடுச்சுன்னு இவ்வளவு சிடுசிடுப்பா பேசறீங்க?"

அவன் அவஸ்தையாய் ப்ரமோத்தை ஒருமுறை பார்த்து விட்டு பிறகு சொன்னான்.

"நான் கிளம்பறேன். குவார்ட்டர்சுக்கு வந்தப்புறம் பேசிக்கறேன்."

அவள் பதிலை எதிர்பார்க்காமல் கியரை கிளை முறிக்கிறாற் போல சப்தத்தோடு மாற்றி



ஆக்சிலேட்டரை அழுத்தினான்.

அவனுடைய மொத்த கோபமும் ஜீப்பின் வேகத்தில் எதிரொலித்தது.

புழுதியும் டீசல் புகையும் வெகு நேரத்துக்கு அடங்கவில்லை.

சிநேகா வாசுகியிடம் வந்தாள். வாசுகி சற்றே படபடப்பாய் நின்றிருந்தாள்.

"என்ன கேட்டார்?"

"ரொம்ப கோபமாப் பேசிட்டுப் போறார்."

"என்னால உங்களுக்கு இப்போ பிரச்சினை ஏற்பட்டுப் போச்சே!"

"சந்தீப் ஏதாச்சும் சொல்லுவாரோன்னு பயப்படறியா? ஒண்ணும் சொல்ல மாட்டார்... ஏதாவது சொன்னாலும் ஐ டோண்ட் கேர்னு துடைச்சி விட்டுட்டு நான் போயிட்டே இருப்பேன். பார்க்கத்தான் சந்தீப் ரஃப் அண்ட் டஃப்... உள்ளுக்குள்ள இலவம்பஞ்சு மாதிரி மென்மையானவர்."

"ஜீப்புல எம்.டி.யும் தானே இருந்தார்?"

"ஆமா..."

"அதை நினைச்சித்தான் நான் கவலைப்படறேன்."

"என்ன கவலை?"

"எம்.டி. ரொம்ப கன்னிங் ஆசாமி. அவருக்குத் தேவைன்னா சுத்தி இருக்கறவங்க மனசை பேச்சு சாதுர்யத்தாலேயே கலபமா மாத்திடுவார்."

"என்ன சொல்லி மாத்துவார்?"

"வேண்டாதவங்க கூடப் பழகறதா என்னைப் பத்தி தப்பா சொல்லுவார்."

"இங்கே பார் வாசுகி. அடிப்படையாவே நான் பொல்யூஷனுக்கு விரோதி... நீயோ கதிரேசனோ என்னை வந்து பார்த்திருக்கலைன்னாலும் இங்கே நடக்கிற முறைகேடுகளைப் பார்க்க ஆரம்பிச்சா தன்னால சம்பந்தப்பட்டவங்களோட மோத ஆரம்பிச்சிருப்பேன். அப்போ நாம அறிமுகம் ஆகியிருப்போம். அதனால நீ கில்ட்டியா ஃபீல் பண்ண வேண்டாம்."

"இருந்தாலும் இன்னிக்கு எனக்கு மூட் அவுட் ஆயிடுச்சு. நீங்க குவார்ட்டர்சுக்கு போயிடுங்க. நாம நாளைக்குப் பார்க்கலாம்."

''சரி''

புன்னகையுடன் தலையசைத்தாள் சிநேகா.

''குவார்ட்டர்ஸ் வரைக்கும் நான் வேணா உங்களைக் கொண்டு வந்து விட்டுட்டுப் போறேன்.''

''நான் என்ன சின்னக் குழந்தையா? எனக்கு வழி தெரியும். இப்போ நாம வந்த அதே வழியில் நானே திரும்பிப் போயிடுவேன்.''

விடை பெற்றாள் சிநேகா.

பத்து நிமிஷ நடையில் குவார்ட்டர்சைத் தொட்டாள். பூட்டை விடுவித்து உள்ளே போன சில நிமிஷங்களிலேயே வாசலில் ஜீப் சத்தம்.

திரைச்சீலையை விலக்கி எட்டிப் பார்த்தாள் சிநேகா.

சந்தீப் வந்து கொண்டிருந்தான். ''என்ன இந்நேரத்துக்கு வந்திருக்கீங்க?''

அவன் வெடிக்கும் முகத்தோடு பதில் எதுவும் சொல்லாமல் உள்ளே நுழைந்தான்.

படீரென ஃப்ரிட்ஜின் கதவை விரித்து பாட்டிலை எடுத்து குளிர்ந்த நீரைக் கடகடவென தொண்டைக்குள் சரித்தபடி சோபாவில் உட்கார்ந்தான்.

''என்ன... நான் கேட்ட கேள்விக்கு பதிலையே காணோம்?''

''என்ன சொல்றது... நான் பண்ணி வைச்ச ஏற்பாட்டையெல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டியே நீ?''

''என்ன ஏற்பாடு பண்ணினீங்க? நான் எப்படி அதைக் கெடுத்தேன்?''

''உன்னை யாரு அந்தப் பொண்ணோட கிராமத்துக்குள்ளே சுத்தச் சொன்னா?''

''ஏன்... அந்தப் பொண்ணோட போனா என்ன?''

''நான் கூட உன்னைக் கவனிக்கலை. எம்.டி. பார்த்துட்டார். அவர்தான் ஜீப்பை நிறுத்தச் சொன்னார். 'உங்ககூட வந்த சிநேகா மாதிரி தெரியுதே... இந்தப் பொண்ணு கூட சேர்ந்து போயிட்டிருக்காளே; கூப்பிட்டுக் கண்டியுங்க'ன்னு சொன்னார் எம்.டி.''

''என்னைக் கண்டிக்க அவர் யாரு? இன்னார் கூடப் பழகு. இன்னார் கூடப் பழகாதேன்னு எங்க



வீட்டைச் சேர்ந்தவங்க கூட எனக்கு சொன்னதில்லை. அப்படி மத்தவங்க சொல்றதை நான் விரும்ப மாட்டேன். இங்கே ட்ரெயினிங் எடுக்கறியா இல்லையான்னு நாலு நாளில் யோசிச்சு சொல்லச் சொன்னீங்களே? நான் இப்பவே சொல்லிடறேன். நான் இந்த ஃபாக்டரிக்கு வரலை.''

அவளைப் பார்த்து பெருமூச்சு விட்ட சந்தீப் சொற்ப விநாடிகளுக்குப் பின் தோள்களைக் குலுக்கினான்.

''ஓ.கே. உன்னிஷ்டம். நான் தலையிட விரும்பலை.''

''தாங்க்யூ...''

''நாளைக்குக் காலைல எத்தனை மணிக்குக் கிளம்பறே? சொல்லு. உன்னைக் கார்லயே கொண்டு போய் விட்டுடறேன்.''

''கிளம்பறதா? எங்கே?''

''ஊருக்குத்தான்...''

''இல்லை சந்தீப். எனக்கு இங்கே வேலை இருக்கு.''

''நீ இங்கே வந்ததே ட்ரெயினிங்கிற்காகத்தான். நீ ட்ரெயினிங் எடுக்கறதில்லைன்னு ஆனப்புறம் இங்கே உனக்கென்ன வேலை?''

''சாரி... அதை உங்ககிட்டே சொல்றதால எந்தப் பிரயோஜனமும் இல்லை... வெட்டி வேலைன்னு நீங்க விமர்சனம் பண்ணுவீங்க. அல்லது மூக்குக்கு மேல உங்களுக்கு கோபம் வரும். அதனால அதை நான் சொல்லப் போறதில்லை.''

அவன் அவளை ஊடுருவலாய்ப் பார்த்தபடி சொன்னான்.

''நீ சொல்லலைன்னாலும் எனக்குத் தெரியும். அந்தப் பொண்ணு வாசுகி உன்னை ப்ரெயின் வாஷ் பண்ணியிருக்கா. என்விரான்மெண்ட்... பொல்யூஷன்னு வறட்டுப் பிரச்சினைகளைக் கையிலெடுத்துக்கிட்டு வேண்டாத காரியங்களில் ஈடுபட உத்தேசிச்சிருக்கே... அப்படித்தானே?''

''உங்களைப் பொருத்தவரைக்கும் அதெல்லாம் வேண்டாத காரியங்களா இருக்கலாம்... ஆனா எனக்கு இது உயிர் போகிற விஷயம்.''

''அப்போன்னா இந்த நிமிஷமே நீ இடத்தைக் காலி பண்ணு. இது ஃபாக்டரிக்கு சொந்தமான

குவார்ட்டர்ஸ்... ஃபாக்டரியின் நிழல்ல இருந்துகிட்டு ஃபாக்டரிக்கு துரோகம் செய்யக் கூடாது.''

சந்தீப் அவள் சூட்கேசை எடுத்து வாசல் கதவருகே வைத்தான்.

---

**5**

**அக்கடான்னு உடை போட கவர்மெண்ட் தடை போடுமா? எல்லாம் சினிமா பாட்டில்தான் என்று நீங்கள் நினைத்தால் தப்பு. 1996 வருஷம் ஏப்ரல் மாதம் முதல் அசோ சாயங்கள் (ASO DYES) போடப்பட்ட துணி வகைகளை இறக்குமதி செய்ய ஜெர்மனி அரசு தடை விதித்துள்ளது. ஆடைகளிலுள்ள இந்த அசோ சாயங்களினால் அவற்றை அணிபவர்களுக்கு புற்றுநோய் உண்டாகலாம் என்ற கண்டுபிடிப்பைத் தொடர்ந்துதான் இந்தத் தடை. இதைத் தொடர்ந்து ஆடை ஏற்றுமதியில் அக்கறை கொண்ட நமது மத்திய அரசு 74 வகை சாயங்களைத் தயாரிக்கவும், பக்குவப்படுத்தவும், சேகரிக்கவும், பரிமாற்றம் செய்யவும் தடை செய்துள்ளது. இப்படித் தடை போடுவதன் மூலம் ஏற்றுமதியாகும் துணி வகைகளில் அசோ சாயங்கள் இடம் பெறாமல் தவிர்க்கலாம் என்பதே திட்டம்.**

---

சிநேகா எதுவும் பேசாமல் சூட்கேசைக் கையிலெடுத்துக் கொண்டு விடுவிடுவென நடக்க ஆரம்பிக்க.

கோபமெல்லாம் தொலைந்து போய் பதட்டம் காட்ட ஆரம்பித்தான் சந்தீப்.

''ஏய் சிநேகா... நீ எங்கே போறே?''

''நீங்க சூட்கேசைத் தூக்கி வெளியே வெச்சு என்னைப் போகச் சொல்லிட்டீங்க இல்லே? நான் எங்கேயோ போய்க்கறேன்.''

''இங்கே இருக்க இடமில்லைன்னு தெரிஞ்சா ஊருக்கே கொண்டு போய் விடச் சொல்லுவேன்னு நினைச்சேன்.''

''இந்த கிராமத்தில் இந்த ஃபாக்டரி குவார்ட்டர்சை



விட்டா தங்கறதுக்கு வேறே இடமே கிடைக்காதுன்னு நினைச்சீங்களா?''

நடந்து கொண்டே அவள் சொல்ல, சந்தீப் பின்னாலேயே ஓடி வந்தான்.

''சிநேகா... மொதல்ல குவார்ட்டர்சுக்குள்ளே போ.''

''நினைச்சா வெளியே போகச் சொல்லுவீங்க... அப்புறம் உள்ளே போகச் சொல்லுவீங்க. உங்க இஷ்டத்துக்கு என்னை ஆட்டுவிக்க முடியாது.''

''சிநேகா...! டோண்ட் மிஸ்டேக் மி... நான் உன்னோட நல்லதுக்குத் தானே சொல்றேன்!''

''உங்களுக்கு பணம் சம்பாதிக்கறதைத் தவிர வேற எதுவும் தெரியாது... உங்களுக்கு தெரிஞ்சதை விட அதிகமாவே எனக்கு நல்லது, கெட்டது தெரியும்...''

தடுத்து நின்ற சந்தீப்பை விலக்கிக் கொண்டு நடந்தாள் சிநேகா.

வழியில் தட்டுப்பட்டவர்களிடம் விசாரித்துக் கொண்டே சென்று வாசுகியின் வீட்டைத் தொட்டாள் சிநேகா.

தாழ்வான கூரையுடன் ஓடு வேய்ந்த வீடு.

அந்த ஆசாமி வாசற்படி வரை அவளைக் கூட்டி வந்து விட்டுச் சென்றான்.

''இந்த வீடுதாம்மா!''

சிநேகா கதவைத் தட்டினாள். நாலைந்து தட்டலுக்குப் பின் திறந்த கதவில் நரைக்க ஆரம்பித்திருந்த தலையுடன் வாசுகியின் ஜாடையில் ஒரு அம்மாள் கதவைத் திறந்தாள்.

''வாசுகி வீடு இதுதானே?''

''ஆமா... நீ யாரு?''

''நான் வாசுகியோட தோழி... அவளைப் பார்க்கணும்.''

சூட்கேசோடு வந்து நிற்கும் அவளை விநோதமாய்ப் பார்த்து விட்டு ''உள்ளே வாம்மா...'' என்றாள். சாணம் போட்டு மெழுகப்பட்டிருந்த கூடத்துக்குள் நுழைந்தாள்.

மரச்சேர்கள் போடப்பட்டிருந்தன.

''அவ பின்னால இருக்கா... கூப்பிடறேன்.''

சூட்கேசை சேருக்குப் பக்கத்தில் வைத்து விட்டு உட்கார்ந்தாள் சிநேகா.

சுவர் பூராவும் பழுப்படைந்த கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் அந்தக் காலத்து முகங்களோடு பிரேம் பிரேமாய் அணிவகுத்திருந்தன.

சொற்ப நிமிஷ காத்திருப்புக்குப் பின் வளையல் சத்தம் கேட்டது.

கேள்விக்குறி முகத்தோடு கூடத்துக்கு வந்த வாசுகி, சிநேகாவை பார்த்ததும் ஆச்சரியமானாள்.

''நீங்களா?''

சிநேகா புன்னகைத்தாள்.

''என்னை நீ எதிர்பார்க்கலையா?''

'' 'யாரோ தோழி உன்னைக் கேட்டு வந்திருக்கா. டவுனிலிருந்து வந்த மாதிரி தெரியுது. சூட்கேசும் கையுமா வந்திருக்கா.' அப்படின்னாங்க... யாராயிருக்கும்னு யோசிச்சிட்டே வந்தேன்.''

''நானாயிருக்கலாம்னு தோணலையா?''

''சூட்கேசோட வந்திருக்கறதா சொன்னதால உங்களை நான் நினைக்கவேயில்லை.''

சொன்ன வாசுகி விநாடிநேர இடைவெளிக்குப் பின் தொடர்ந்து அவளிடம் கேட்டாள்.

''ட்ரெயினிங் வேண்டாம்... ஊருக்கே போயிடலாம்னு முடிவு பண்ணிட்டீங்களா?''

''நீ சொன்னதுல பாதி சரி... பாதி தப்பு.''

''புரியலையே.''

''ட்ரெயினிங் வேண்டாம்னு முடிவு பண்ணினதா சொன்னியே அது சரி. ஊருக்குப் போறதா சொன்னது தப்பு... ஃபாக்டரி பிரச்சினை ஓயற வரைக்கும் இந்த கிராமத்திலேயே தங்கறதா முடிவு பண்ணிட்டேன். தங்கி உங்க போராட்டத்துக்கு புது வடிவம் தரப் போறேன்.''

வாசுகி அவளை அதிர்ச்சியோடு பார்த்தாள். சிநேகா தொடர்ந்தாள்...

''என்ன அப்படி பார்க்கறே? ரெண்டு மாச ட்ரெயினிங் எடுத்துக்கிட்டா தனிப்பட்ட முறையில் என்னோட கேரியரை வளர்த்துக்கலாம். ஆனா ஒரு கிராமத்தையே பலி வாங்க உத்தேசிச்சிருக்கற அந்த ஃபாக்டரியை இழுத்து மூடப் போராட்டம் நடத்தி அதில் வெற்றியும் பெற்றால் விலை மதிப்பில்லாத



உயிர்களைக் காப்பாத்தின மனநிம்மதி கிடைக்குமே... என்னைப் பொறுத்தவரை இதுதான் என்னோட ரெண்டு மாச பயிற்சின்னு நினைச்சிக்கப் போறேன். போராட்டக்களமே பயிற்சிக் களம்.''

''ஒரு நிமிஷம் உள்ளே வாம்மா'' என்று வாசுகியை அழைத்த அவள் தாயார், ''அந்தப் பொண்ணுக்கென்ன புத்தி பிசகிப் போச்சா? கட்டிக்கப் போறவனோட ஒழுங்காப் போய் குவார்ட்டர்சில் இருக்கச் சொல்லு.''

''நானும் நீயும் சொன்னா அந்தப் பொண்ணு கேக்காதும்மா... ஃபாக்டரியை எதிர்க்கணும்கற எண்ணம் வேலுச்சாமி செத்தப்பவே அது மனசில் ஆழமாப் பதிஞ்சிருச்சு. வேலுச்சாமியை ஆஸ்பத்திரிக்கு இந்தப் பொண்ணுதான் கார்ல கூட்டிட்டுப் போச்சு.''

''இங்கே தங்கியிருக்கலாம்கற எண்ணத்தோட வந்திருந்தா அந்த எண்ணத்தை மாத்திக்கச் சொல்லு.''

''அம்மா...''

''அம்மாவாவது. ஆட்டுக் குட்டியாவது... கதிரேசன்கூட சேர்ந்து நீ கெட்டது போதாதுன்னு இவ வேற வந்திருக்காளா?''

''அம்மா... கொஞ்சம் மெதுவாப் பேசு.''

''அப்படித்தான் சத்தமாப் பேசுவேன். நானா இருக்கப் போய் உன்னைத் தனியா கூப்பிட்டுச் சொல்றேன். உங்கப்பா வீட்டில் இருந்திருந்தார்னா அவளை நேருக்கு நேராப் பார்த்துக் கத்த ஆரம்பிச்சிருப்பார்...''

''உனக்கும் அப்பாவுக்கும் மருந்துக்குக் கூட இங்கிதம் தெரியாதுங்கறது தெரிஞ்ச விஷயமாச்சே!''

''முன்னே பின்னே தெரியாதவங்க வீட்டுக்குப் பெட்டி படுக்கையோட வந்து நிக்கறதுதான் இங்கிதமாக்கும்?''

''பேச ஆரம்பிச்சா நீ நிறுத்தாம பேசிட்டே இருப்பே... உன்கிட்டே நான் அப்புறமா பேசிக்கறேன்.''

சொல்லி விட்டு மீண்டும் கூடத்துக்கு வந்தாள் வாசுகி. திகைத்துப் போய் நின்றாள். அங்கே சிநேகா இல்லை.

## 6

**சென்னையில் நிலத்தடி நீர் குடிப்பதற்கு ஏற்றதாக உள்ளதா என்று சமீபத்தில் ஆய்வு செய்தார்கள். இதற்காக இருபது இடங்களில் இருந்து நிலத்தடி நீர் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. இரண்டே இடங்களில் மட்டுமே நீர் குடிக்கத் தகுந்ததாய் உள்ளது என்பது சோதனையின் முடிவு. இதர இடங்களில் புளோரைட் என்ற நச்சுப் பொருள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.**

**எண்ணூர், திருவொற்றியூர், வியாசர்பாடி, மயிலாப்பூர், வடபழனி, ஈக்காடுதாங்கல், குரோம்பேட்டை முதலிய இடங்களில் நீர் கடினத்தன்மையோடும், கால்ஷியம் குளோரைடு, சல்பேட் போன்ற ரசாயனப் பொருட்கள் உள்ளடங்கியும் காணப்பட்டதாகத் தெரிகிறது. 'குடி குடியைக் கெடுக்கும்' என்ற போர்டை இனிமேல் மதுக்கடைகளில் மட்டுமல்ல; போரிங் பைப்புகளிலும் மாட்டி வைக்கலாம் போலுள்ளது.**

---

**வா**சுகி குழப்பமும், கவலையுமாய் வெளியே வந்து பார்த்தாள்.

சற்றுத் தொலைவில் சிநேகா சூட்கேசோடு விடுவிடுவென்று சென்று கொண்டிருந்தாள்.

பதட்டமாய் ஓடிச் சென்று அவளைப் பிடித்தாள்.

''சிநேகா... நில்லுங்க...''

திரும்பினாள் சிநேகா.

''கோபிச்சிட்டு வந்துட்டீங்களா? அம்மா அப்படித்தான் பேசுவாங்க... அவங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன். ப்ளீஸ்... வாங்க...''

சிநேகா புன்னகைத்தாள்.

''நான் கோபிக்கலை. என்னால பிரச்சினை வேண்டாம்னுதான் ஒதுங்கி வந்துட்டேன்.''

''இப்போ எங்கே போறீங்க?''

''இந்தச் சின்ன ஊருக்குள்ளே விசாரிச்சா வாடகைக்கு ஒரு வீடு கிடைக்காமலா போகும்?''

''நீங்க ஏன் வாடகைக்கு வீடு எடுக்கணும்? எங்க வீட்ல தங்கிருங்க.''



''இல்லை வாசுகி... நான் உன்னைப் பார்க்க வந்ததே வாடகைக்கு வீடு கிடைக்குமான்னு விசாரிக்கத்தான்.''

''நீங்க காலேஜில் படிக்கற பொண்ணு. வாடகைப் பணத்துக்கு எங்கே போவீங்க.''

''அந்தக் கவலையெல்லாம் உனக்கு வேண்டாம். ஒரு வருஷமே வேணும்னாலும் தங்கிப் போராடற அளவுக்கு பாங்க்ல எனக்கு சேவிங்ஸ் இருக்கு. தவிர நல்ல விஷயத்துக்காக எல்லாவித ஒத்துழைப்பும் தர என்னோட அம்மா, அப்பா தயங்க மாட்டாங்க. நல்லதுன்னு என் மனசுக்குப்பட்டதை நான் செய்ய எனக்கு முழு சுதந்திரமும் தந்திருக்காங்க. யோசிச்சிப் பாரு... என்னோட காதல்ரோட இவ்வளவு தூரம் அனுப்பியிருக்காங்கன்னா என்னை எவ்வளவு தூரம் நம்பறாங்க பாரு!''

சிநேகா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வேகமாய் வந்த கார் அவளோரமாய் வந்து நின்றது.

சந்தீப் எட்டிப் பார்த்தான்.

''சிநேகா...! நீ செய்யறது கொஞ்சம் கூட நல்லா இல்லை.''

''அப்படி என்ன செஞ்சிட்டேன்?''

''இப்படி சூட்கேஸோட கிராமம் பூரா அலைஞ்சி என்னோட மானத்தை வாங்காதே!''

''குவார்ட்டர்சில் இருந்துகிட்டு நான் நினைச்சதை சாதிக்க முடியாது... அதனாலதான் வந்துட்டேன். மத்தபடி உங்க மேல எனக்கு கோபம் எதுவும் இல்லை.''

பளிச்சென்ற புன்னகையோடு சிநேகா சொல்ல, அவன் சில விநாடி மவுனத்துக்குப் பிறகு தொடர்ந்தான்.

''சரி கார்ல ஏறு...''

''குவார்ட்டர்சுக்கு நான் வர முடியாது சந்தீப்!''

''குவார்ட்டர்சுக்கு நீ வர வேண்டாம்... உன்கிட்ட நான் பேசணும்... கார்ல ஏறு...''

வாசுகி குற்ற உணர்ச்சியோடு அவளிடம் சொன்னாள்.

''அவர்தான் கூப்பிடறாரே... போங்க் சிநேகா... அவர் என்னைத் தப்பா நினைச்சிக்கப் போறார்.''

''என்ன பேசணும் சந்தீப்?''

''நட்ட நடுரோட்டில் எல்லார் முன்னாலும் நான்

விலாவாரியா உன்கிட்ட சொல்லிட்டிருக்கணுமா?''

''எதைப் பத்திப் பேசப் போறீங்கன்னு ஒரு 'ஹின்ட்'டாவது குடுங்க. என்னா எனக்கு அட்வைஸ் பண்ற உத்தேசம் இருந்தா நான் வரத் தயாராயில்லை. உங்க அட்வைஸைப் பொறுமையாக் கேக்க எனக்கு நேரமில்லை... பொறுமையுமில்லை.''

''உன்னோட அம்மா அப்பாவுக்கு போன் பண்ணினேன்... அது சம்பந்தமாப் பேசத்தான் உன்னைக் கூப்பிடறேன். போதுமா?''

லேசான திகைப்போடு அவனை ஏறிட்டாள்.

''அ... அவங்களுக்கு போன் பண்ணினீங்களா? எப்போ?''

''நீ குவார்ட்டர்சை விட்டுப் போனப்புறம் முதல் வேலையா அவங்களுக்கு போன் பண்ணினேன்.''

''என்ன சொன்னாங்க?''

''மொதல்ல கார்ல ஏறு.''

அவள் வாசுகியைப் பார்த்தாள்.

வாசுகி ''போயிட்டு வாங்க'' என்றாள்.

தயக்கத்தோடு காரில் ஏறி அமர்ந்தாள் சிநேகா.

படக்கென்று கியரை மாற்றி காரை நகர்த்தினான் சந்தீப்.

''இந்தப் பொண்ணுதான் உனக்கு வீடு பார்த்துத் தரப் போறாளா?''

''நீங்க வந்த விஷயத்தைப் பேசுங்க. அம்மா என்ன சொன்னாங்க?''

''இன்னொரு விஷயத்தையும் தெரிஞ்சிக்க. இவளோட ஆள் கதிரேசனை வேலைல இருந்து 'ஸஸ்ட்' பண்ணிட்டாங்க.''

''ஏன்?''

''அவன் ஃபாக்டரிக்கு எதிரான காரியங்களைப் பண்றான்னு தகவல் கிடைச்சது.''

''சரி நம்ம விஷயத்துக்கு வாங்க... நீங்க போன் பண்ணினப்போ அப்பா இருந்தாரா?''

''இருந்தார்.''

''என்ன சொன்னார்?''

''என்னைத் திட்டினார்.''

''அதானே பார்த்தேன். என்னை எதுவும் சொல்ல மாட்டாங்களே!''

'' 'நீயாவது அவளுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?'ன்னு என்னைத் திட்டினாங்க. 'முடிஞ்சவரைக்கும் சொல்லிப் பார்த்துட்டேன். அவ கேக்கலை'ன்னு சொன்னேன்.''



''அப்புறம்?''

'' 'மறுபடி பேசிப் பாரு'ன்னாங்க.''

''அதான் காரெடுத்துக்கிட்டு வந்தீங்களா? நான்தான் கார்ல ஏறுறதுக்கு முன்னாலேயே சொல்லிட்டேனே... அட்வைஸ் பண்ணி என் மனசை மாத்தலாம்னு நினைச்சிங்கன்னா முடியாது. ஆளை விடுங்க.''

சந்தீப் ஸ்டியரிங்கை வளைத்துக் கொண்டே சொன்னான்.

''உன்னோட குணம் எனக்கே தெரிஞ்சிருக்கறப்ப உன்னோட அப்பா அம்மாவுக்கு அது தெரியாதா? அப்படி ஒருவேளை அவ கேக்கலைன்னா நான் என்ன செய்யணும்ன்னும் சொன்னாங்க.''

''என்ன செய்யணுமாம்?''

'' 'உன்னை நம்பித்தான் அவளை அந்தக் கிராமத்துக்கு அனுப்பினோம். அவ தனியா இருக்கக் கூடாது'ன்னு என்கிட்ட கண்டிப்பா சொல்லிட்டாங்க.''

''நான் குவார்ட்டர்சில் வந்திருக்கத் தயாராயில்லை சந்தீப்...''

''அதனாலதான் என் தலைவிதியை நொந்துகிட்டே குவார்ட்டர்சுக்கு வெளியே ஒரு வீட்டைப் பார்த்துட்டேன். அங்கேதான் நாம இப்போ போறோம்.''

சிநேகா ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள்.

''சந்தீப்... ரியலி?''

''ஆமா... வேற வழி?''

''நான் செய்யற காரியங்கள் உங்களுக்குத் தொந்தரவா இருக்காதா?''

''நாம ரெண்டு பேரும் ஒண்ணா இருக்கப் போறோம். அவ்வளவுதான். மத்தபடி உன்னோட பிரச்சினைகளில் நான் மூக்கை நுழைக்க மாட்டேன். போதுமா?''

''இந்த மெச்சூரிட்டியைத்தான் உங்ககிட்டே எதிர்பார்த்தேன் சந்தீப்.''

''நீ போனப்புறம் யோசிச்சேன். பொதுப் பிரச்சினைக்காக நாம ரெண்டு பேரும் ஏன் சண்டை

போட்டுக்கணும்?''

பிரேக்கை மிதித்தான்.

கார் அந்த சிறிய ஓட்டு வீட்டின் முன்னால் நின்றது. காரின் கதவைத் திறந்து விட்டான்.

வீட்டின் முகப்புக் கதவில் மாட்டியிருந்த பித்தளைப் பூட்டை விடுவித்தான்.

''கிராமத்தின் பழைய பிரசிடெண்டுக்கு சொந்தமான வீடு. திருவிழா சமயங்கல்ல விருந்தினர்கள் வந்தா தங்க வைக்கிறதுக்காக இந்த வீட்டை உபயோகிச்சிட்டிருந்தாராம். நான் கேட்டதும் சாவியைத் தூக்கிக் கொடுத்துட்டார்.''

''நமக்கு இவ்வளவு பெரிய வீடு தேவையே இல்லை.''

''சிநேகா... நீ வீட்டை கொஞ்சம் சுத்தம் பண்ணி வை... நான் குவார்ட்டர்சுக்கு போய் என்னோட திங்சையும் எடுத்துட்டு வர்றேன்.''

தலையசைத்தாள். சந்தீப் காருக்கு வந்தான்.

கார் சில திருப்பங்களை விழுங்கி குவார்ட்டர்ஸைத் தொட்டது.

குவார்ட்டர்ஸுக்குள் நுழையாமல் நேராக ஃபாக்டரிக்கு சென்று மெயின் கேட்டில் பிரவேசமானது.

ஓரமாய் பார்க் செய்து விட்டு படிகளில் உயர்ந்தான். எம்.டி.யின் அறைக்கதவை தள்ளினான்.

ப்ரமோத் நிமிர்ந்தான்.

''என்னாச்சு சந்தீப்?''

''நீங்க சொன்ன மாதிரி சிநேகாவை பிரசிடெண்ட்டோட வீட்டுக்கு கூட்டிட்டு வந்துட்டேன்.''

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே சிரித்தான் ப்ரமோத்.

''குட்...''

''அவ மனசை மாத்த முடியும்னு நினைக்கறீங்களா சார்?''

''நேரடியா நாம எதிர்ப்பைக் காமிச்சா வீரியம் அதிகமாகும்... அதனாலதான் அரவணைச்சிப் போகச் சொன்னேன். கொஞ்சம் கொஞ்சமா அவளை நம்ம வழிக்கு இழுக்கப் பார்ப்போம்.''

''அவளோட மன உறுதியைப் பத்தி உங்களுக்குத்



தெரியாது சார்.''

''கரைப்பார் கரைச்சா கல்லும் கரையும். கதிரேசன், வாசுகி இவங்கல்லாம் பிரச்சினைக்குரியவங்கதான். ஆனா அவங்ககிட்டே வேகம் இருக்கற அளவுக்கு விவேகம் இல்லை. அதனால நான் இத்தனை நாளா பயப்படலை. ஆனா இப்போ அவங்களோடு விவேகம் நிறைஞ்ச சிநேகா சேர்ந்திருக்கறப்போ நாம யோசிச்சே ஆக வேண்டியிருக்கு. இந்த நிலைமையில் நீங்க பாட்டுக்கு சிநேகாகிட்டே சண்டை போட்டுட்டு அவளை அனுப்பி விட்டது தப்பு... அவ நம்ம கண் பார்வையிலேயே இருக்கறதுதான் நமக்கு நல்லது. அப்போதான் அவங்களோட நடவடிக்கைகளுக்கு நம்மால கவுண்ட்டர்பிளான் பண்ண முடியும்.''

''ப்ராஜெக்ஷன் டெக்னிக்கல் விஷயங்களில் நான் எவ்வளவோ யோசனைகள் சொல்றேன். இந்த நிர்வாக யுக்திகளெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூடத் தெரியலை சார்.''

சிரித்தான் ப்ரமோத்.

''அப்போ நான் கிளம்பட்டுமா சார்?''

''போயிட்டு வாங்க... சிநேகாவோட ஜோவியலா பேச்சுக் கொடுத்து அவ நடவடிக்கைகளைத் தெரிஞ்சிக்கங்க. தெரிஞ்சிகிட்டு என்கிட்ட வந்து சொல்லுங்க.''

உதடுகளில் புகையை வெளியேற்றிக் கொண்டே புன்னகைத்தவன் ஆஷ்ட்ரேயில் சாம்பலைத் தட்டினான்.

---

***நியூ எட் பதிப்பகத்தின் சுற்றுச்சூழல் வழக்குகள் புத்தகத்திலிருந்து...***

*ராமாராவும் மற்றும் சிலரும் நார் எடுப்பதற்காக கற்றாழையை ஆற்று நீரில் ஊற வைத்து அதனைக் குடிப்பதற்கு லாயக்கற்றதாக ஆக்கியதற்காக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 277 – ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். விசாரணையில் பொது நீரை மாசுபடுத்திய குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டு ஆளுக்கு எட்டு அணாக்கள் அபராதம் விதித்து தண்டிக்கப்பட்டது.*

*இந்த வழக்கு 1904 – ல் நடந்தது.*

*பிரிட்டிஷ் அரசின் நீதிபதிகள் சந்தவர்க்கர் மற்றும் ஆஸ்டன் வழங்கிய தீர்ப்பு இது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பிரிட்டிஷ் அரசு காட்டிய அக்கறை இந்த வழக்கின் தீர்ப்பில் நிதர்சனமாய்த் தெரிகிறது. பிரிட்டிஷ் அரசைப் போராடி விரட்டியபோது அவர்களின். நல்ல குணாதிசயங்களையும் சேர்த்தே விரட்டி விட்டது யார் தவறு?*

---

அந்த நாளின் காலையில் கதிரேசனும் வாசுகியும் வந்தார்கள்.

''வாங்க கதிரேசன்.''

சிநேகா புன்னகையோடு வரவேற்றாள். கதிரேசன் சந்தோஷ முகம் காட்டினான்.

''ஃபாக்டரியை விட்டுப் போயிடுவேன்னு நினைச்சேன். ஆனா எங்களைவிட வேகத்தோட எதிர்ப்புக் களத்தில் இறங்குவேன்னு நான் நினைச்சே பார்க்கலை.''

''உங்களை 'ஊஸ்ட்' பண்ணிட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்.''

சிரித்தான் கதிரேசன்.

''அதில் எனக்கு வருத்தமில்லை. எந்த நிமிஷமும் அவங்க அப்படி செய்யலாம்னு நான் எதிர்பார்த்ததுதான். என்னோட நடவடிக்கைகளைக் கொஞ்ச நாளைக்கு ஒத்தி வெச்சிருந்தேன். அதை சீக்கிரமே முடுக்கி விட்டுட்டாங்க... அவ்வளவுதான் வித்தியாசம்.''

''என்ன நடவடிக்கை எடுக்கப் போறீங்க கதிரேசன்?''

சிநேகாவின் கேள்விக்கு பதிலளிக்காமல் யோசனையில் விழுந்தான் கதிரேசன்.

பிறகு தன்னிடமிருந்த பையை விரித்து உள்ளிருந்து மடிக்கப்பட்ட தாளை எடுத்தான்.

தாளை விரிக்க பெரிய வரைபடம் கண்ணில் பட்டது.

''இது என்ன கதிரேசன்?''

''அந்த ஃபாக்டரியோட லே அவுட் பிளான்.''

''இன்னும் நிறைய படங்கள் வெச்சிருக்கீங்களே?''

''பில்டிங் லே அவுட்... மெஷினரி லே அவுட்...



ட்ரெயினேஜஸ்... எலக்ட்ரிபிகேஷன். எல்லாமே தனித்தனி வரைபடங்களா வரைஞ்சு வெச்சிருக்கேன்... என்னோட ஆறு மாசத்து உழைப்பு இது.''

''இதை வெச்சு நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''இவைகளைக் காப்பி எடுத்து கலெக்டர்... மினிஸ்டர்... எம்.எல்.ஏ. எல்லோருக்கும் நேரில் கொண்டு போய் தரலாம்னு இருக்கேன்.''

''இது நீங்களா போட்ட லே - அவுட்தானே?''

''ஆமா...''

''ஃபாக்டரி உங்களை ஊஸ்ட் பண்ணின எரிச்சல்ல நீங்க ஏதேதோ வரைஞ்சு ஃபாக்டரியை வம்புக்கிழுக்கறதா சுலபமா சொல்லிடுவாங்க.''

''இதெல்லாம் கண்ணு முன்னால நான் பார்த்து பார்த்து வரைஞ்சது. நேரில் வந்து இன்ஸ்பெக்ட் பண்ணச் சொல்வேன்.''

''சும்மா நீங்க ஒரு பெட்டிஷன் குடுத்து இன்ஸ்பெக்ட் பண்ண வாங்கன்னு சொன்னா அதுக்கு மதிப்பே இல்லை... பெட்டிஷனைக் கிழிச்சி குப்பைத் தொட்டில் போட்டுடுவாங்க.''

''நீ சொல்றது அபத்தமா இருக்கு. என்னோட இந்த தகவல் சேகரிப்பு அத்தனையும் வீண்னு சொல்றியா?''

''இல்லை... இந்த விஷயத்தை இப்போ வெளியிட்டு வீணாக்காதீங்க... தகுந்த சமயத்தில் உபயோகிக்கணும். அதுதான் புத்திசாலித்தனம்.''

''தகுந்த சமயம்கறது எது? எனக்குப் புரியலை.''

''ஜனங்களோட ஆதரவு நமக்குக் கிடைக்கறப்போதான் இதெல்லாம் பிரயோஜனப்படும்.''

''அது நடக்காது சிநேகா.''

''ஏன் நடக்காது?''

''ஏற்கனவே நாங்க அதில் தோத்துப் போய்தான் இந்த வழிக்கு வந்தோம்.''

''ஜனங்களுக்கு சரியான முறையில் பிரச்சினையைப் புரிய வைக்காததுதான் உங்க தப்பு. ஒரு அட்டெம்ப்டை மட்டும் வெச்சு தோல்வியை முடிவு பண்ணக் கூடாது.''

''வீடு வீடாப் போய் விளக்கிச் சொல்லியாச்சு... யாரும் பிரச்சினையின் தீவிரத்தைப் புரிஞ்சிக்கிற

மாதிரி தெரியலை. சரியான முறையில் சொல்றதுன்னா என்னன்னு எனக்குப் புரியலை..."

"நான் சொல்றபடி செய்ங்க. ஜனங்க உங்க பக்கம் வர்றாங்களா இல்லையான்னு அப்புறம் சொல்லுங்க."

"நல்லது நடக்கணும்... அதுக்கான வழிமுறையை யார் சொன்னாலும் நான் கேக்கத் தயாரா இருக்கேன்." என்றான் கதிரேசன் - ஆர்வமாய் சிநேகாவின் முகத்தைப் பார்த்தபடி.

சிநேகா சொல்ல ஆரம்பித்தாள்.

---

**8**

**புகை, இரைச்சல் என்று சகல ரூபத்திலும் சுற்றுப் புறத்தைக் கெடுத்திருக்கிறோம். அதன் விளைவுகளைக் கண்கூடாகப் பார்த்து உணர்ந்த பிறகு, பழைய மாதிரியே மாசு மருவற்ற பூமி கிடைக்காதா என்று ஏங்குகிறோம்.**

**அப்படிப்பட்ட கற்பை இழக்காத மிகச் சிறிய உலகம் ஒன்று நம் பூமிக்குள் இருக்கிறது. 1.2 ஹெக்டேர் பரப்பளவில் நியூயார்க்கில் உள்ள அந்த மினி உலகத்தின் பெயர் BIOSPHERE 2. கண்ணாடிச் சுவரால் அடைக்கப்பட்ட தனி உலகம். அதனுள் செயற்கையாய் நாம் விரும்பும் இயற்கை மண்டலம் (ECO SYSTEM) உருவாக்கப் பட்டிருக்கும்.**

**அந்தச் சின்னஞ்சிறு உலகத்தில் ஒரு சிறு சமுத்திரம், ஒரு மலைக்காடு, ஒரு புல்வெளி, ஒரு பாலைவனம் இவையெல்லாம் உண்டு. ஒரே வருத்தம். நாமெல்லாம் போய் அந்த மாடல் உலகத்தில் குடியிருக்க முடியாது. தற்போது அதனுள்ளே விஞ்ஞானிகள் மட்டுமே இருக்கிறார்கள். காலநிலை மாற்றம், உயிர் பன்மயம் (BIO-DIVERSITY) இதை எல்லாம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.**

---

குயிலா பரபரப்பாய் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

ஸ்டூலில் உட்கார்ந்திருந்த மாரிமுத்து அவளையே பார்த்தான்.



உள்ளேயிருந்து இருமல் சத்தத்தோடு குரல் கேட்டது.

"குயிலா... குயிலா..."

ஈனஸ்வரம்.

அவள் கதவு நிலை இடிக்காமல் குனிந்து அந்த அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன?"

"கிளம்பிட்டியா?"

"கிளம்பறேன்ய்யா"

குயிலா அந்த அறையை 'விட்டு வெளியே வந்தாள்.

ஸ்டூலில் உட்கார்ந்திருந்த மாரிமுத்துவைப் பார்த்து முகத்தைச் சுருக்கினாள்.

"நீ இன்னும் போகலையா?"

அவன் கட்டைக் குரலில் சொன்னான்.

"குயிலா... நீ ஒரு முடிவைச் சொல்லாம நான் எப்படிப் போறது?"

"நான்தான் சொல்லிட்டேனே... ஃபாக்டரி வேலை எனக்கு வேண்டாம்."

"விவரம் புரியாதவளா இருக்கியே... உள்ளே வேலை கிடைக்காதான்னு அவனவன் துடிக்கிறான். அத்தோடு உன் புருஷனுக்கு சேர வேண்டிய பணம் யாருக்கும் பிரயோசனம் இல்லாமக் கிடக்குதேன்னு தான் நான் விசனப்படறேன்."

"அவங்க நியாயமான ஆளுங்களா இருந்தா அந்தப் பணத்தைக் கொடுத்துட்டுப் போக வேண்டியதுதானே? நான் அங்க வேலைல சேர்ந்தாத்தான் அந்தப் பணம் தருவாங்கன்னு ஒரு கண்டிஷன் எதுக்காகப் போடணும்?"

"குயிலா... பெரிய ஃபாக்டரில சில சட்ட திட்டங்கள் இருக்கத்தான் செய்யும்..." என்று ஆரம்பித்தவனை இடைமறித்தாள்.

"நீ வேலைக்கு ஆள் பிடிச்சித் தர்ற காண்ட்ராக்டர். அவங்க கேக்கற ஆளை கூட்டித் தந்தா உனக்கு கமிஷன் கிடைக்கும். அதான் என்கிட்டே இவ்வளவு தூரம் தொங்கறே. என் புருசனுக்கு அவங்க தரப் போற பணத்திலும் கொஞ்சம் ஒதுக்கிக்கலாம்னு பார்க்கறே. எனக்கு அந்தப் பணம் வேண்டாம். அந்த வேலையும் வேண்டாம். தயவு செஞ்சு போயிடு. இனிமே இங்கே

வராதே.''

இதற்கு மேல் பேசுவதில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்தவனாய் மெல்ல எழுந்தான்.

இறுக்கமான முகத்தோடு வெளியேறிச் சென்றான்.

''குயிலா... நீ இன்னுமா போகலை?'' ஈனஸ்வரத்தில் கணவனின் குரல் கேட்டது.

''இதோ கிளம்பிட்டேன்ய்யா.''

வெளியே வந்து கதவைச் சாத்திக் கொக்கியைப் போட்டாள்.

''குயிலா...''

புதிய குரலைக் கேட்டுத் திரும்பினாள்.

கதிரேசன் நின்றிருந்தான்.

அவனோடு வாசுகியும், சிநேகாவும் தெரிந்தார்கள். சிநேகாவை சுருங்கிய நெற்றியோடு பார்த்தாள் குயிலா. பார்த்துக் கொண்டே கதிரேசனிடம் கேட்டாள்.

''அண்ணே நீங்களா? என்ன விசயம்?''

''இவங்க பேரு சிநேகா... ஃபாக்டரில வேலை செஞ்சிட்டிருந்த உன் புருஷன் இப்போ உடம்புக்கு முடியாமப் படுத்திருக்கான்னு கேள்விப்பட்டு பார்க்க வந்திருக்காங்க. நீ கிளம்பிட்டே போலிருக்கு?''

''ஊர்க்கவுண்டர் தோட்டத்துல வேலை. அங்கதான் கிளம்பிட்டிருந்தேன்.''

''அவசரமா?''

''எதுக்குண்ணே கேக்கறீங்க?''

''இவங்க உன்னோட பேசணும்ங்க.''

''என்ன பேசணும்? மொதல்ல இவங்க யார்னு சொல்லுங்க.''

''ஃபாக்டரி மேனேஜர் கூட வளர்த்தியா ஒருத்தர் இருப்பாரே. அவரைக் கட்டிக்கப் போற பொண்ணு.''

''ஃபாக்டரி விசயமாகப் பேச வந்திருக்கா?''

''ஆமா''

ஸ்டூலையும், பெஞ்சையும் இழுத்துப் போட்டாள்.

''உக்காருங்க!''

உட்கார்ந்த பின் சிநேகா மெல்ல பேச்சைத் துவக்கினாள்.

''உன் கணவருக்கு இப்போ எப்படியிருக்கு?''

''கொஞ்சம் கொஞ்சமா தேறிட்டிருக்கார்.''

''அவரை ஃபாக்டரியை விட்டு



நிறுத்திட்டாங்களா? இல்லை அவரே நின்னுட்டாரா?''

''உடம்புக்கு வந்து அடிக்கடி படுக்க ஆரம்பிச்சாரு... வேலைக்கு லாயக்கில்லைனு சொல்லி நிறுத்திட்டாங்க.''

''பணம் குடுத்தாங்களா?''

''அவருக்கு பதிலா என்னை வேலைக்கு எடுத்துக்கறேன்னு சொன்னாங்க. 'நீ வேலைல சேர்ந்தின்னா உன் புருசனுக்கு உதவித் தொகை பட்டுவாடா பண்றேன்'னு சொன்னாங்க. நான் வேண்டாம்னுட்டேன்.''

''ஏன்?''

''பணம் யாருக்குங்க வேணும்? பணத்துக்கு ஆசைப்பட்டு அங்கே போய் சேர்ந்த இவரோட கதி இப்ப என்ன ஆச்சு பாருங்க...!''

''உன் புருசனோட உடம்பு மோசமானதுக்கு ஃபாக்டரிதான் காரணம்னு நினைக்கறியா?''

''பின்னே?''

''இதை ஊருக்குள்ளே சொன்னா நம்புவாங்களா?''

''அவங்க நம்பறாங்களோஇல்லையோ... எனக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிஞ்ச உண்மைங்க இது... விவசாயக் கூலிக்குப் போயிட்டிருந்தப்ப கூட எவ்வளவு திடகாத்திரமா இருந்தார் தெரியுமா? இத்தனை வருசமா இல்லாம இப்போ ஃபாக்டரில் சேர்ந்த ஆறேழு மாசத்துள்ளே உடம்பு காத்து போன பலூன் மாதிரி தளர்ந்து போச்சுன்னா என்ன அர்த்தம்?''

''நீ சொல்றது ரொம்ப கரெக்ட் குயிலா... ஆனா இந்த ஊர் ஜனங்களுக்கு அது புரியலையே?''

''புரியலைன்னா அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?''

''அப்படி விட முடியுமா... இப்போ நாம இதையெல்லாம் அசட்டையா விட்டா நாளைக்கு நம்ம பிள்ளைங்களுக்குத்தான் இந்த பாதிப்பெல்லாம்... இருபத்தஞ்சு முப்பது வருஷமா முறுக்கேறின உடம்பெல்லாம் ஃபாக்டரி சகவாசத்தால ஆறே மாசத்தில் தளர்ந்து போயிடுத்துன்னா பச்சை உடம்புகளோட கதியை நினைச்சிப் பாரு.''

''என்னால என்ன செய்ய முடியும்?''

''நான் இந்த ஊருக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாதவ. அந்த ஃபாக்டரில ட்ரெயினிங் எடுக்கறதுக்காக வந்தேன். ஆனா ஃபாக்டரியால ஊர் எந்த அளவுக்கு பாதிக்கப்படப் போகுதுன்னு புரிஞ்சிகிட்டு ஃபாக்டரிக்கு எதிரா போராட முடிவு பண்ணிட்டேன். பாதிக்கப்பட்ட நீ என்னோட முயற்சிக்கு தோள் குடுத்தா ஊர் ஜனங்க மனசை நிச்சயமா மாத்த முடியும்.''

''வாசுகியும், கதிரேசண்ணனும் மொதல்ல இருந்தே ஃபாக்டரி வேண்டாம்னு சொல்றாங்க... ஆனா யாரும் கேக்கலை. என்னால ஏதாச்சும் செய்ய முடியும்னு நீங்க நினைச்சிங்கன்னா நிச்சயமா நான் செய்யறேன்.''

சிநேகா புன்னகையோடு கதிரேசனையும், வாசுகியையும் பார்த்தாள்.

''பத்து நாள் தினமும் சாயந்திரம் ஜனங்களைத் திரட்டும் முயற்சியில் ஈடுபடுங்க... பதினோராவது நாள் ஃபாக்டரிக்காரங்க அதிர்ச்சி அடையற மாதிரி ஒரு காரியத்தை நாமெல்லாம் சேர்ந்து செய்யப் போறோம்.''

---

**சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போவதென்பது, நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று சுவாசிக்க இயலாத அளவுக்கு அசுத்தமாக மாறுவது, உணவுப் பொருட்கள்; குடிநீர் உட்கொள்ள லாயக்கற்றதாவது என்பது மட்டுமல்ல. அளவுக்கு மீறிய இரைச்சலும், சுற்றுச் சூழல் கேடுதான். தொழில் வளர்ச்சி, நகரமயமாதல் ஆகிய இரண்டும்தான் ஒலித் தொல்லைகளின் பிறப்பிடம். சப்த அளவு 60 டெசிபலுக்கு அதிகமாக இருந்தால் உடம்புக்கு நல்லதல்ல. கணக்கெடுப்பின்படி முக்கிய சாலைகளில் சப்தம் பெரும்பாலும் 70 டெசிபலுக்கு மேலே இருப்பதாகச் சொல்கிறார்கள்.**

---

9

**வா**சுகி புடவை மடிப்பை சரியாய் எடுத்து விட்டுக் கொண்டு உள்ளறையை விட்டு வெளியே வந்தாள்.



கூடத்திலிருந்த நாராயணன் குரலால் அவளை நிறுத்தினார்.

''என்னம்மா...! அந்த கதிரேசனைப் பார்க்கப் புறப்பட்டுட்டியா...?''

''ஆமா...!''

''இதெல்லாம் நல்ல இருக்கா? என்னதான் சின்ன வயசிலர்ந்து ஒண்ணாப் பழகியிருந்தாலும் ஒரு வயசுக்கு மேல எல்லை தெரிஞ்சு பழகணும்.''

''என்னப்பா சொல்றீங்க?''

அவள் அம்மா குறுக்கிட்டாள்.

''உனக்குக் கல்யாணம் காட்சின்னு நாங்க பண்ணிப் பார்க்க வேண்டாமா?''

''வேண்டாம்னு நான் சொல்லலையே?''

''அவன் கூட சுத்திட்டிருந்தின்னா உன்னை எவன் கல்யாணம் பண்ணிக்குவான்?''

''என்னம்மா பேசறீங்க? நான் ஒரு நல்ல நோக்கத்துக்காக அவரோட சேர்ந்து வேலை செய்யறேன். எங்களோட தூய்மையான நட்பை இப்படியெல்லாம் பேசிக் கொச்சைப்படுத்தாதீங்க...''

அவள் அப்பா பக்கவாத்தியமாய் சேர்ந்தார்.

''உன்னைக் காலேஜில் சேர்த்துப் படிக்க வைச்சது இப்படி சமூக சேவை செய்யறதுக்காக இல்லை. நீ செய்யறதெல்லாம் எங்களுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை.''

''எனக்கு நல்லதுன்னு பட்டதை நான் செய்யறேன்... மத்தவங்க பேசறதைப் பத்திக் கவலைப்பட மாட்டேன். ஆனா நீங்க இப்படிப் பேசறது நிஜமாவே மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கு.''

''நீ அப்படி நினைச்சின்னா... இப்ப அங்கே போகாதே -''

''நாளைக்கு ஃபாக்டரிக்கு எதிரா ஒரு முக்கியமான போராட்டம் இருக்கு... சிநேகா இருக்காங்களே... அவங்க சொன்னபடி ஜனங்ககிட்டே பேசி... கிராமத்துக்குள்ளே கிட்டத்தட்ட நூறு நூத்தம்பது பேரை எங்க பக்கம் சேர்த்திருக்கோம்... முக்கியமான நேரத்தில் நான் அங்கே இல்லைன்னா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?''

அவர்களிருவரும் தொடர்ந்து ஏதோ சொல்ல வர

". அதை லட்சியம் பண்ணாமல் வெளியேறினாள் வாசுகி.

பத்து நிமிஷ நடையில் அந்தச் சின்ன குடிசை வீட்டை அடைந்தாள்.

ஆட்கள் சேரத் துவங்கியதில் உற்சாகம் அடைந்து கதிரேசன் அந்தக் குடிசை வீட்டை வாடகைக்குப் பிடித்திருந்தான்.

அவனே **'சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வுக் கழகம்'** என்று ஒரு துணி பேனரில் நீலத்தைக் கரைத்து எழுதி மாட்டியிருந்தான்.

அதன் முன்னே ஆட்கள் நடமாடுவது வாசுகிக்கு சந்தோஷமாயிருந்தது.

உள்ளே நுழைந்தாள்.

தட்டியில் எழுதிக் கொண்டிருந்த கதிரேசனுக்கு வாசகங்கள் சொல்லிக் கொண்டிருந்தாள் சிநேகா.

வாசுகி நுழைந்ததும் நிமிர்ந்தாள்.

"வாசுகி... என்ன இவ்வளவு லேட்?"

"கொஞ்சம் லேட் ஆயிடுச்சு."

"என்ன ஒரு மாதிரி டல்லா இருக்கே?"

"இ... இல்லையே..."

"கதிரேசன்... நீங்க பார்த்துச் சொல்லுங்க."

அவன் எழுதுவதை நிறுத்திவிட்டு வாசுகியை ஏறிட்டுப் பார்த்தான்.

வாசுகி செயற்கையாய் சிரிக்க முயன்றாலும், அதை ஊடுருவிக் கொண்டு முகவாட்டம் தெரிந்தது.

"ஆமா... முகத்துல ஏதோ வருத்தம் தெரியுது..."

"ஒ... ஒண்ணுமில்லை..."

சிநேகா அவளை மென்மையாய்க் கடிந்தாள்.

"எதுவா இருந்தாலும் வெளிப்படையாய் சொல்லணும்... என்கிட்டே சொல்லலைன்னாலும் பரவாயில்லை. கதிரேசன்கிட்டே சொல்லு. அவரோட நீ எத்தனை வருஷமாப் பழகிட்டிருக்கே...!"

குரல் தழுதழுத்தாள் வாசுகி.

"அதாங்க பிரச்சினையே!"

"என்ன சொல்றே?"

"இன்னிக்கு நான் கிளம்பி வர்றப்போ என்னோட அம்மாவும் அப்பாவும் என்னிக்கும் இல்லாதபடிக்கு என்னை நிறுத்தி பேசிட்டாங்க."



"பேசிட்டாங்களா? என்ன பேசினாங்க?"

"கதிரேசனோட நான் பழகறதை தப்பாப் பேசிட்டாங்க."

சிநேகா சிரித்தாள்.

"இதுக்காகத்தான் உன்னோட முகம் வாடிப் போச்சா?"

"பின்னே... பெத்தவங்களே இப்படிப் பேசறப்ப மனசுக்குக் கஷ்டமா இருக்காதா?"

"இங்கே பார் வாசுகி. நல்லா நாகரீகம் வளர்ந்த சிடியிலேயே ஒரு ஆணும் பெண்ணும் சிரிச்சுப் பேசினா தப்பான கோணத்தில்தான் பார்க்கறாங்க."

கதிரேசன் குறுக்கிட்டு சொன்னான்.

"வாசுகி... வித்தியாசம் பார்க்காம நாம நட்புரிமையோட பழகறோம்னு நம்ம மனசாட்சிக்குத் தெரியும். அதுக்கு மேல மத்தவங்க பேச்சை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுடணும்... அந்த அர்த்தமில்லாத பேச்சுக்களை மனசுக்குள் அனுப்பினோம்னா உள்ளே போராட்டம்தான் நடக்கும்."

"கதிரேசன் சொல்றது ரொம்ப கரெக்ட்... நாளைக்கு முதன் முதலா ஒரு அடையாளப் போராட்டம் நடக்கப் போகுது... அதுக்கான வேலைகளை உற்சாகமா செய்யறதை விட்டுட்டு கண்டதையும் போட்டு மனசைக் குழப்பிக்காதே... தெரிஞ்சதா?"

மெல்லிய கண்ணீர்ப் படலத்துடன் தலையாட்டினாள் வாசுகி.

"என்ன கதிரேசன்... நீங்களும் அப்செட் ஆயிட்டீங்களா? எழுதறதை நிறுத்திட்டீங்க..."

அவன் சிரித்துக் கொண்டே பிரஷ்ஷினால் தடிமன் தடிமனான எழுத்துக்களை சிருஷ்டிக்கத் துவங்கினான்.

வாசுகி கேட்டாள்.

"நாளைக்கு ஃபாக்டரி வாசல்ல புதுமையான போராட்டத்தை நடத்தப் போறதா சொன்னீங்க... என்ன போராட்டம்னு நீங்க சொல்லவே இல்லையே?"

"அதுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யாம எப்படிச் சொல்ல முடியும்?"

"என்ன ஏற்பாடுகள்?"

''சொல்றேன். நாளைக்கு அந்த ஃபாக்டரியில் ஃபைனல் இன்ஸ்பெக்ஷன்... ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்களின் ஜீப் உள்ளே போறப்போ கோஷங்களோட நாம அங்கே இருக்கணும்.''

''சரி''

''இப்போ கதிரேசன் எழுதிட்டிருக்கற பேனர்கள் அதுக்காகத்தான்...''

''என்ன பேனர்?''

குனிந்து பார்த்தாள்.

கொட்டை எழுத்துக்கள் பளிச்சென்று தெரிந்தன.

**'நாங்கள் கள்ளிப்பட்டியின் நாளைய பிரஜைகள்...!'**

''இதிலென்ன புதுமை இருக்கு?''

''இந்த பேனரை யார் கையில் தரப் போறோம்கறதில்தான் போராட்டத்தின் புதுமை இருக்கு.''

''யாராவது குழந்தைங்க கையில் குடுக்கப் போறீங்களா?''

''ம்கூம்''

''பின்னே?''

''இங்கே வா...''

தடுப்புக்குப் பின்னே கூட்டிச் சென்றாள்.

போர்த்திக் கிடந்த துணியை விலக்கினாள் சிநேகா.

ஒரு விநாடி அரண்டு போனாள் வாசுகி...

எலும்புக்கூடுகள் வரிசையாய் நின்றிருந்தன.

வாசுகி திகைப்போடு கேட்டாள்.

''இதுங்களோட கையிலா அந்த பேனரைத் தரப் போறீங்க?''

''ஆமா...''

''ஃபாக்டரியால ஏற்படப் போற பாதிப்புகளை பொட்டில் அறைஞ்ச மாதிரி மத்தவங்களுக்கு சொல்லிடும் அந்த பேனரும், எலும்புக்கூடுகளும்...''

கதிரேசன் புன்னகையோடு சொன்னான்.

''அது மட்டுமில்லை வாசுகி... என்னதான் நாம விளக்கிச் சொன்னாலும் புரிஞ்சிக்காத இந்த கிராமத்து ஜனங்க இந்த சிம்பாலிக் விளக்கத்தைப் பார்த்தாலே போதும்... மனசுக்குள்ளே அசைபோட ஆரம்பிச்சிடுவாங்க.''



சிநேகா சிரித்தாள்.

''அந்த ஃபாக்டரிக்கு நாளையிலிருந்தே தலைவலிதான்... இது ஒரு ஆரம்பம்தான்... இன்னும் நிறைய இருக்கு.''

---

***தூசி!*** ***அற்பமான விஷயம் என்று நினைக்கிறோம். ஆனால் அதுவே ஆண்டுக்கு 64000 பேர்களின் மரணத்திற்குக் காரணமாக அமைகிறது. இருதய, சுவாச நோய்களைக் கடுமையாக்கி மனிதனின் மரணத்துக்கு வழிவகுக்கிற இந்த தூசி மாசை விஞ்ஞான பூர்வமாக MICROSCOPIC KILLARS (மைக்ரோஸ் கோபிக் கில்லர்ஸ்) என்கிறார்கள்.***

***2.5 மைக்ரானுக்குக் குறைவான சின்னஞ்சிறு தூசிகள்தான் மிக மிக ஆபத்தானவை. அவை சுவாசப் பைகளில் சென்று அதன் IRAGILE SECTION களில் தங்கி விடுகின்றன. உடம்பின் இயற்கைத் தற்காப்பு முறைகளை ஏமாற்றி விட்டு அவை உள்ளே நுழைந்து விடுவதால் கூட இருந்தே குழி பறிக்கத் துவங்கி விடுகின்றன.***

---

**ச**ந்தீப் பரபரப்புடன் கிளம்பிக் கொண்டிருக்கும் சிநேகாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்ன சிநேகா... இன்னிக்கு நேரத்திலேயே கிளம்பிட்டே... ரொம்ப டென்ஷனா வேற இருக்கே?''

சிநேகா அவனை நோக்கி பதில் புன்னகை பூத்தாள்.

''டென்ஷனெல்லாம் ஒண்ணுமில்லை.''

''அப்படின்னு உன்னோட வாய் சொன்னாலும் முகம் நீ டென்ஷனாத்தான் இருக்கேன்னு சொல்லுதே.''

''டென்ஷன் இல்லை. ஒரு லேசான பரபரப்பு... அவ்வளவுதான்!''

''எதுக்காக பரபரப்பு...?''

''என்னோட முயற்சிகளின் முதல் கட்டம் ஓரளவுக்கு வெற்றி.''

''புரியலையே?''

''இந்த கிராமத்துல கிட்டத்தட்ட நாறு நாத்தம்பது

பேர் எங்க பக்கம் சேர்ந்துட்டாங்க."

"அப்படியா?"

"அவங்களை வெச்சு முதல் முதலா இன்னிக்கு ஒரு நூதனமான போராட்டம் நடத்தப் போறேன்."

"கேள்விப்பட்டேன். நூதனமான போராட்டம்னு சொன்னியே. உன் போராட்டத்தில் என்ன நூதனம்?"

"ஃபாக்டரிக்கு வர்றப்போ நீங்க தெரிஞ்சிப்பீங்க."

"இப்போ சொல்ல மாட்டியா?"

"கொஞ்சம் சஸ்பென்சா இருக்கட்டுமே?"

"போராட்டம் எத்தனை மணிக்கு ஆரம்பம்?"

"சரியா ஒன்பது மணியிலிருந்து... டயமாச்சு...! நான் வரேன்."

வீட்டை விட்டு வேகமாய் வெளியேறினாள்.

பத்து நிமிஷ நடையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக் கழகத்தைத் தொட்டாள். பலரும் காத்திருந்தார்கள்.

சிநேகா சொன்னாள்.

"ஆளுக்கொரு பேனரை எடுத்துக் கையில் வெச்சிக்க வேண்டியதுதானே?"

"எங்கிருக்கு?"

"கதிரேசனைக் கேட்டாக் குடுக்கறார்."

"அவரைக் காணலை."

"என்ன சொல்றீங்க? கதிரேசன் இன்னுமா வரலை?"

"வரலைங்க..."

"வாசுகி..."

"அவளையும் காணோம்... ரெண்டு பேருமே வரலை."

சிநேகா திகைப்போடு சில விநாடிகள் யோசித்தாள்.

"ஏன்? ஏன் வரலை?"

"தெரியலைங்க."

"யார்கிட்டேயாச்சும் வரலைன்னு சொல்லி விட்டாங்களா?"

"இல்லைங்க."

சிநேகா குழப்பத்தோடு நின்றாள்.

"அவங்க ஏன் வரலைன்னு உங்களுக்கே தெரியாதுங்களா?": என்றான் கூட்டத்தில் ஒருவன்.



"வீடு வீடா வந்து ஆள் சேர்த்தாங்க... முக்கியமான சமயத்தில் அவங்க ரெண்டு பேரையுமே காணோமே?"

சிநேகா அவர்களுக்கு பதில் ஒன்றும் சொல்லாமல் உள்ளே போனாள்.

கதிரேசன் தீட்டி வைத்திருந்த பேனர்களைக் கையிலெடுத்து ஒரு ஆளிடம் கொடுத்தாள்.

"இதை எல்லார்க்கும் குடுங்க... நான் இப்போ வந்துடறேன்."

சொல்லி விட்டு வேகநடையில் வாசுகியின் வீட்டை நோக்கிப் போனாள்.

அங்கே சின்னப் பரபரப்புத் தெரிந்தது.

வாசுகியின் அம்மாவும் அப்பாவும் கோப முகங்களோடு வாசலில் நின்றிருந்தார்கள்.

சிநேகா தயங்கித் தயங்கி அவர்களை நெருங்கினாள்.

அம்மா ஆக்ரோஷமாய் கத்தினாள்.

"வாடி... வா... என் மகளைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிட்டுத் தான் நீ மறு வேலை பார்ப்பியா?"

"அம்மா... ஏன் நீங்க இப்படி கோபிச்சுக்கறிங்க? இன்னிக்கு ஒரு நாள் மட்டுமாவது வாசுகியை அனுப்பி வைங்க."

அவள் அப்பா நிமிர்ந்தார்.

"வாசுகியை அனுப்பி வெய்க்கறதா?"

"ஆமா..."

"என்னம்மா நீ சொல்றே? அவ வீட்ல இல்லையே... எப்பவும் போல அங்கே போயிட்டான்னுதானே நாங்க நினைச்சிட்டிருக்கோம்."

"வாசுகி அங்கே போயிட்டாளா?"

"ஆமா"

"எப்போ போனா?"

"அவ எப்போ போனான்னு தெரியலை... விடிகாலை நேரத்தில் எந்திரிச்சுப் போயிட்டா போலிருக்கு. நாங்க படுக்கையை விட்டு எந்திரிக்கும் போதே அவ வீட்டில் இல்லை. அதான் கோபமாய் பேசிட்டிருக்கோம்."

சிநேகா மனசுக்குள் பரபரப்பு.

"சார்... அவ அங்கேயும் வரலையே?"

"அங்கேயும் வரலையா? அவ எங்கே

போனான்னு கதிரேசனைக் கேட்டுப் பாரு.''

''அவரும் வரலை.''

''கதிரேசனும் வரலையா?''

அவர்களும் பதட்டமானார்கள்.

''என்னம்மா விளையாடறீங்களா?''

''எட்டு மணிக்குத்தான் வாசகியை வரச் சொன்னேன். அவ எதுக்காக நேரத்திலேயே எந்திரிச்சுப் போனான்னு எனக்கே தெரியலை.''

வாசகியின் அப்பா அங்கிருந்த ஒருவனை அவசரமாய் கூப்பிட்டார்.

''இங்கே வாடா.''

''என்னங்கய்யா?''

''பின்னாடி வீதில கதிரேசன் வீட்டுக்கு ஓடிப் போய் அவன் வீட்டில் இருக்கானான்னு பார்த்துட்டு வா.''

''சரிங்க.''

''அவன் வீட்டில் இல்லைன்னா எங்கே போனான், எப்போ போனான்னு விசாரிச்சிட்டு வா.''

''ஆகட்டுங்க.''

தலையாட்டி விட்டு வேகமாய் சென்றான் அவன்.

சிநேகா அவஸ்தையாய் நின்றிருந்தாள்.

அவள் மனம் பூராவும் போராட்டத்துக்காகக் காத்திருக்கும் பொதுஜனங்கள் மேல் நிலைத்திருந்தது.

'எல்லா ஏற்பாடுகளும் பண்ணிவிட்ட நிலையில் இவர்கள் இரண்டு பேரும் இப்படி காலை வாரிக் கொண்டிருக்கிறார்களே... முன்னமே ஒரு தகவலாவது சொல்ல வேண்டாமா?'

அவள் யோசித்துக் கொண்டிருந்தபோது போனவன் திரும்பி வந்தான்.

''என்னாச்சு... கதிரேசன் இருந்தானா?''

''இல்லீங்க... எங்கே போனார்னு தெரியலை... காலைல நாலு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பிப் போயிட்டாராம்.''

அவள் அம்மா இரண்டு கையாலும் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

''நாம பயந்த மாதிரி ஆயிடுச்சோ என்னவோ... சண்டாளி மாலையும் கழுத்துமா வந்து நின்னா நான் என்ன பண்ணுவேன்...?''

சிநேகா அவளை சமாதானப்படுத்த முயன்றாள்.



''அவசரப்பட்டு தப்பான முடிவுக்கு வராதீங்க... அவங்க ரெண்டு பேரும் அப்படிப் பழகலை...''

சிநேகா மேல் சீறிப் பாய்ந்தாள்...

''சும்மா நிறுத்துடி...''

''நீங்க ஆத்திரத்தில் நிதானமில்லாமப் பேசறீங்க...''

சிநேகா மேலும் ஏதோ சொல்ல வந்த விநாடி அந்த நபர் பதட்டமாய் ஓடி வந்தார்.

பரபரப்பாய் கத்தினார்.

''உன் மக வாசகியும், கதிரேசனும் மோசம் பண்ணிட்டாங்கப்பா...''

''எ... என்னாச்சு?''

''மணி நாயக்கர் தோப்புக்குள்ளே ஒரு வேப்பமரத்துல இரண்டு பேரும் தூக்குப் போட்டுச் செத்துப் போயிட்டாங்க...''

அவரின் வார்த்தைகள் அங்கிருந்த எல்லோரையும் அதிர்ச்சியால் உலுக்கிப் போட்டது.

---

**நாங்கள் எதற்காக சாகிறோம் என்பது கூடத் தெரியாத நிலையில் 3000 அப்பாவி இந்தியர்கள் ஒரே இரவில் கொல்லப்பட்டனர். அந்த கறுப்பு இரவு 1984 டிசம்பர் 2 – ஆம் தேதி. இடம் போபால். யூனியன் கார்பைடு என்ற அமெரிக்க நிறுவனத்தின் கைங்கர்யம்தான் அது. கழிவுகளை அகற்றவும், புகை போக்கவும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் பின் பற்றப்படாததன் விளைவு, எம்.ஐ.சி. (மீதைல் ஐசோ சயனைடு) என்ற விஷப்புகை தொழிற் சாலையிலிருந்து ஊரெங்கும் பரவியதுதான் காரணம்.**

---

**ஊ**ருக்கு ஒதுக்குப்புறமாயிருந்தது அந்தத் தோப்பு.

அதன் ஓரத்தில் வளர்ந்திருந்த - உயரம் குறைவான வேப்பமரத்தின் கிளையில் கதிரேசன், வாசகி இரண்டு பேரும் ஒரே கயிற்றில் முடிச்சிட்டுக் கொண்டு இறந்து கிடந்தார்கள்.

இரண்டு பேரின் பெற்றோர்களும் மார்பில் அறைந்து கதறிக் கொண்டிருக்க, சிநேகா

அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தாள்.

போலீஸ் வந்து... இரண்டு உடம்புகளையும் கவனமாய் இறக்கிக் கொண்டு இருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் வாசகியின் அம்மா, அப்பாவிடம் வந்தார்.

''என்னம்மா... கதிரேசன் கூடப் பழகாதேன்னு உங்க மகளைக் கண்டிச்சீங்களா?''

''அ... ஆமாங்க... ஆனா பாவிப்புள்ள இப்படி ஒரு முடிவுக்கு வருவான்னு நாங்க யாருமே நினைச்சிப் பார்க்கலை.''

சிநேகா இன்ஸ்பெக்டரை நெருங்கினாள்.

''எக்ஸ்க்யூஸ்மி சார்.''

''எஸ்...''

''என் பேர் சிநேகா...'' என்றவள் தொடர்ந்து அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். ''உங்ககிட்டே சில விஷயங்களை நான் தெளிவுபடுத்தணும்...''

''என்ன?''

''காதல் தோல்வியால தற்கொலை பண்ணிக்கிட்டாங்கன்னு நினைச்சு இவங்க பேரண்ட்ஸ்கிட்டே நீங்க விசாரிச்சிட்டிருக்கீங்களே...''

''அதானே உண்மை?''

''இல்லை... நீங்க நினைக்கறது தப்பு.''

''பின்னே?''

''அவங்க ரெண்டு பேரும் காதலிக்கவேயில்லை. நண்பர்களாகத்தான் பழகிட்டிருந்தாங்க.''

சிரித்தார் அந்த இன்ஸ்பெக்டர்.

''எத்தனை தற்கொலைகளைப் பார்த்திருக்கோம். எத்தனை காதலைப் பார்த்திருக்கோம். அண்ணன், தங்கச்சி மாதிரிப் பழகினாங்களேம்பாங்க. லாட்ஜ்ல ஒரே ரூம்ல கட்டிப் பிடிச்சி தற்கொலை பண்ணிகிட்டிருப்பாங்க.''

''இவங்க இரண்டு பேரும் நீங்க நினைக்கற மாதிரி இல்லை சார்... இவங்க ஒரு லட்சியத்துக்காகப் போராட ஆரம்பிச்சவங்க... காதலைக் குறுக்கே நுழைக்கற அளவுக்கு முதிர்ச்சி இல்லாதவங்க இல்லை.''

''காதல் பல புத்திசாலிகளை முட்டாளாக்கியிருக்கு.''



''சார்... தயவு செஞ்சு நான் சொல்றதை நம்புங்க. பல குப்பைகளை நீங்க பார்த்திருக்கலாம். இவங்களையும் அந்த லிஸ்டில் சேர்க்காதீங்க.''

''கிளீனா லெட்டர் எழுதி வெச்சிட்டு செத்திருக்காங்க. தெளிவான தற்கொலை... அநாவசியமா நீயும் குழம்பி மத்தவங்களையும் குழப்பாதே.''

மடிக்கப்பட்ட தாளை நீட்டினார். ''படிச்சுப் பாரு.''

சிநேகா லெட்டரை வாங்கினாள்.

**'எங்களைப் பெற்ற பாசமில்லாத இதயங்களுக்கு!'**

**பெரியவர்கள் சம்மதத்தோடு வாழ்க்கையை இனிமையாய் துவக்க விரும்பினோம். எடுத்த எடுப்பிலேயே நாங்கள் சேர்ந்து வாழ்வதற்கு எதிர்ப்பு எனும் அபஸ்வரம் காதில் விழத் துவங்கியதால் மனம் உடைந்தோம். வாழ்வை வெறுத்தோம். சாகத் துணிந்தோம். மற்றபடி எங்கள் சாவுக்கு யாரும் காரணமல்ல.**

**இப்படிக்கு**<br>
***வாசகி,***<br>
***கதிரேசன்.***

படித்து முடித்து விட்டு இறுக்கமான முகத்தோடு நிமிர்ந்தாள் சிநேகா.

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''இது யாரோட கையெழுத்து?''

''வா... வாசகியோட கையெழுத்துதான்.''

''ரெண்டு பேரும் தீவிரமாக் காதலிச்சிருக்காங்கங்கறதுக்கு இதை விட வேறென்ன சாட்சியம் வேணும்?''

''இன்னமும் என்னால ஜீரணிக்க முடியலை சார்... நேத்திக்கு என்கூட பேசிட்டிருந்தப்ப கூட இந்த மாதிரி சிம்டம்ஸ் எதுவுமே தெரியலை. இன்னிக்கு நடத்த இருந்த போராட்டத்தில் பங்கெடுத்துக்கற உற்சாகத்தோட இருந்தாங்க.''

''ஆர்வமா நீ தகவல்கள் சொல்ல முன் வந்ததுக்கு நன்றி.''

அத்தோடு அவளைத் துண்டித்துக் கொண்டு சம்பிரதாயங்களில் இறங்கினார் இன்ஸ்பெக்டர்.

உடல்கள் மார்ச்சுவரி வேனில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட பின் மெதுவான நடையில்

வீட்டை அடைந்தாள் சிநேகா.

வீட்டில் சந்தீப் இருந்தான்.

''என்ன சிநேகா... போராட்டம் அது இதுன்னே... அதுக்குள்ளே திரும்பி வந்துட்டே?''

''தற்காலிகமா கான்சலாயிடுச்சு...''

''ஏன்... எலும்புக்கூடு போராட்டத்தை முன்னின்று நடத்த இருந்த உன்னோட ஃப்ரெண்ட்ஸ் தூக்கில் தொடங்கிட்டதாலா...?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

''சின்ன கிராமம்... நியூஸ் புயல் வேகத்தில் எல்லா இடத்திலும் பரவிடும். பாவம். காதல் தோல்வியால தற்கொலை பண்ணிட்டாங்களா...?''

''அவங்க காதலிக்கவேயில்லை...''

''அப்படின்னு நீ சொல்றே...''

''வாசுகியே சொல்லியிருக்கா... நேத்து கூட பேசும்போது 'என்னோட வீட்டிலேயே என்னைத் தப்பாப் பேசறாங்க. எனக்கும், கதிரேசனுக்கும் இடையிலுள்ள நட்பை தப்பாப் புரிஞ்சிக்கிறாங்க'ன்னு வருத்தப்பட்டா...''

''அந்த வருத்தத்தினால தற்கொலை செஞ்சிக்கிட்டிருப்பாங்க.''

''அப்படின்னா காதல் தோல்விங்கற மாதிரி ஏன் லெட்டர் எழுதிவெக்கணும்? எனக்கு சந்தேகமா இருக்கு...''

''என்ன சந்தேகம்?''

''அவங்க ரெண்டு பேரையும் ஃபாக்டரி ஆட்கள் கொலை பண்ணி தூக்கில் தொங்க விட்டு இருப்பாங்கன்னு சந்தேகப்படறேன்.''

''உனக்கு மூளை சுத்தமாப் பிசகிப் போச்சா? அவங்கதான் தெளிவா லெட்டர் எழுதியிருக்காங்களே?''

''இருந்தாலும் ஒரு சந்தேகம் உறுத்திகிட்டே இருக்கு.''

''உனக்கு இடது கையாவும், வலது கையாவும் இருந்து உதவி பண்ணின ஆக்டிவ் மெம்பர்ஸ் இறுந்துட்டாங்க. இனிமே உன் பாடு கஷ்டம் தான். ஊருக்குப் பெட்டி கட்ட வேண்டியதுதான்... இல்லையா?''

சிநேகா தலையாட்டி மறுத்தாள்.

''இனிமேதான் என்னோட நடவடிக்கை



தீவிரமாகப் போகுது. என்னைப் பொறுத்தவரைக்கும் ஃபாக்டரி எம்.டி.தான் அவங்க சாவுக்குக் காரணம்ன்னு தெளிவா நம்பறேன். பணத்தால எல்லா முறைகேடுகளையும் மறைச்சிடலாம்ன்னு நினைக்கறார். அது தப்பான எண்ணம்ன்னு கூடிய சீக்கிரம் புரிஞ்சிப்பார்...''

''என்ன செய்யப் போறே?''

''ஸாரி... உங்ககிட்டே சொல்றதுக்கில்லை.''

---

12

**சூரிய வெப்பத்தைப் பெருமளவில் கிரகிக்கும் கடல்கள் இல்லையென்றால் பூமி என்றைக்கோ குளிர்ந்து போய் மனிதர்களற்ற கோளமாகி இருக்கும். பூமியின் தட்ப வெப்பத்தைக் கவனித்துக் கொள்கிற கன்ட்ரோல் ரூமாக இருக்கிற கடல் பிரதேசத்தையும் மனிதன் விட்டு வைக்கவில்லை. எண்ணெய்க்கசிவு, கழிவுநீர் போன்றவற்றால் அதன் இயற்கைத் தன்மையைக் கணிசமாய்க் கெடுத்து வருகிறான். எண்ணெய்க்கசிவு, நுண்ணிய கடல் உயிரிகளை முதலில் பாதிக்கிறது. அந்த உயிரிகளை உண்டு வாழும் மீன்களும் பாதிக்கப்படுகின்றன. இப்படி உணவுச் சங்கிலி பூராவும் படிப்படியாய் விஷம் பரவி கடைசியில் மீனை உணவாகக் கொள்கிற மனிதனையும் பாதிக்கிறது. சுருக்கமாக ஒரு வரியில் சொன்னால் மனிதகுலம் தங்களை அறியாமல் ஒரு ஒட்டு மொத்தமான தற்கொலை முயற்சியில் கொஞ்சம் கொஞ்சமாக ஈடுபட்டு வருகிறது.**

---

கார்கள் புழுதி மேகங்களோடு விரைந்தன.

கார் வரிசையின் முன்னாலும், பின்னாலும் நெற்றியில் சிவப்பு விளக்கை மாட்டியிருந்த போலீசின் பைலட் ஜீப்புகள்.

மத்தியில் சியர்ரா கார்.

அதன் ஏசி ஜில்லிப்புக்குள் அமைச்சர் அறிவுமணி.

தங்க பிரேம் கண்ணாடி போட்டு இருந்தார். முகம் நிறைய சுருக்கங்கள். தோளில் சால்வை.

வேஷ்டியில் கட்சிக் கரை. சிரிக்கிறபோது வெற்றிலைக் கறை பல்வரிசை. பேசினால் செங்கல் உராய்வது போல கரகரதத மேடைக்குரல்.

பி.ஏ.விடம் கேட்டார்.

''என்னய்யா... ஹோப் இருக்கா? உள்ளாட்சித் தேர்தலிலும் நாம இடத்தைப் பிடிப்போமா?''

''கண்டிப்பா சார்... வெற்றி நமக்குத்தான்.''

''இங்கே பாரு. கட்சிக்காரன் மாதிரி நீயும் ஜால்ரா போடக் கூடாது... கூட்டத்தில் ஜனங்களோட ரியாக்ஷன் என்னன்னு பார்த்து நிஜமான கருத்தைச் சொல்லணும்.''

''அப்படி இல்லை சார்... ஜனங்களோட ரெஸ்பான்சை பார்க்கறப்போ தொண்ணூறு சதவீத ஆதரவு நமக்குத்தான்னு தெளிவாத் தெரியுது.''

''மீதி பத்து சதவீதம்?''

''அது... வந்து.''

''சும்மா சொல்லு...''

''சில அமைச்சர்கள் மிதப்பா அறிக்கை விடாம இருந்தாங்கன்னா அந்த பத்து சதவிகிதமும் நமக்கே கிடைக்கும்.''

''அடுத்து என்ன ப்ரொக்ராம்?''

''குட்டைப்பாளையம்கற இடத்தில் கொடியேத்தி வைக்கணும்... அதுக்கப்புறம் நாலு மணி நேரம் நீங்க ரெஸ்ட் எடுத்துக்கலாம்.''

''குட்டைப்பாளையம் இன்னும் எவ்வளவு தூரம் போகணும்.''

''இன்னும் அரை மணி நேரப் பிரயாணம் சார்.''

பி.ஏ. சொன்ன விநாடி கார் வேகம் குறைந்தது. மெதுவாய் ஓரங்கட்டி நின்று விட்டது.

''டிரைவர்... என்னாச்சு?''

''முன்னால போற காரெல்லாம் நின்னுடுச்சுங்கய்யா''

பி.ஏ.விடம் திரும்பினார்.

''இறங்கிப் பாருய்யா''

பி.ஏ., காரின் கதவை விரித்தார்.நின்றிருந்த கார் வரிசையைக் கடந்து முன்னோக்கிச் சென்றார். சொற்ப நேரத்தில் பதட்டத்தோடு திரும்பி வந்தார்.

''சார்... சாலை மறியல்...''

''சாலை மறியலா... யார் பண்றாங்க? கட்சிக்காரங்களா?''



''பொது ஜனங்க...''

''எதுக்கு?''

''சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக் கழகம்னு பேனர் பிடிச்சிருக்காங்க.''

''வன்முறைக்காரங்களாத் தெரியுதா?''

''இல்லை சார்... ஒரு பொண்ணுதான் முன்னிலையில் நிக்குது.''

''பொண்ணா?''

ஆச்சரியப்பட்டார். காரை விட்டு மெல்ல இறங்கினார்.

பி.ஏ. அவரைத் தடுத்தார்.

''நீங்க இறங்க வேண்டிய் அவசியமில்லை சார்... பைலட் ஜீப்பில் வந்திருக்கற செக்யூரிட்டி பீப்பிள்ஸ் அவங்களை அப்புறப்படுத்தற முயற்சியில் இறங்கியிருக்காங்க.''

''வேணாம்னு சொல்லு... என்ன பிரச்சினைன்னு நான் பார்க்கணும்.''

அறிவு மணி வேகமாய் முன்னால் நடக்க ஆரம்பித்தார்.

இருநூறுக்கும் மேற்பட்ட கிராமத்து ஜனங்கள் சாலைக்கு குறுக்கே அமர்ந்திருந்தார்கள்.

'குடிப்பதற்கு அமிலம்; சுவாசிப்பதற்கு நச்சு - பாக்டரி தரும் பரிசு' என்று பேனர்.

'உயிர்களை மதிக்காத தொழில் ஒரு தொழிலா? உயிர்களை மதிக்காத அரசாங்கம் ஒரு அரசாங்கமா?' இன்னொரு பேனர்.

விதவிதமான வாசகங்கள் தென்பட்டன. முன்பாக சல்வார் கமீசில் சிநேகா நின்றிருந்தாள்.

அமைச்சர் அறிவுமணியைப் பார்த்ததும் வணக்கம் சொன்னாள்.

''மன்னிக்கணும் சார்... உங்களுக்கு இடைஞ்சல் தரணும்கறது எங்க நோக்கம் இல்லை... தினம் தினம் செத்துட்டிருக்கற இந்த கிராமத்து ஜனங்களின் அபாயகரமான நிலைமையைப் புரிய வைக்கணும்கறதுதான் எங்க நோக்கம்.''

''என்ன பிரச்சினை?'' என்றார்.

''இந்த ஊரில் ஆரம்பிச்சிருக்கற கெமிக்கல் ஃபாக்டரிதான் பிரச்சினை சார்.''

''விளக்கமா சொல்லுங்க.''

''அந்த ஃபாக்டரி பாதுகாப்பு ஏற்பாடுகளை

முறையா கடைப்பிடிக்கறதில்லை... தொழிலாளர்களோட, பொது ஜனங்களோட உயிரைத் துச்சமா மதிக்குது... இது வரைக்கும் பலிகள் மூணு. இன்னும் பல பேர் மரணத்தின் பிடியில் கொஞ்சம் கொஞ்சமாக சிக்க ஆரம்பிச்சிருக்காங்க.''

''ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இருக்காங்க. அரசாங்கத்தில் அப்படிப்பட்ட தொழிற்சாலைக்கு அனுமதி தர மாட்டாங்களே!''

''பணத்தால எல்லாரையும் விலைக்கு வாங்கிட்டாங்க சார்... இங்கே பாருங்க. இவ பேர் குயிலா... இவ புருஷன் படுத்த படுக்கையா கிடக்கார். ஃபாக்டரில வேலை பார்த்தவர். இப்போ அன்ஃபிட்ன்னு வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. எப்பேர்ப்பட்ட திடகாத்திரசாலியும் அந்த ஃபாக்டரிக்குப் போனா நாலே மாசத்தில் அன்ஃபிட் ஆயிடுவான். அந்த ஃபாக்டரியை மூடச் சொன்னீங்கன்னா இந்த ஊர் ஜனங்க பிழைப்பாங்க.''

''ஊர்ப் பெரியவங்க சம்மதத்தோடதானே ஃபாக்டரி தொடங்கப் பட்டிருக்கும்?''

''அவங்களும் அப்பாவி கிராமத்து ஜனங்கதானே சார்... தாங்கள் கொஞ்சம் கொஞ்சமா கொல்லப்படறோம்கற விழிப்புணர்வே இல்லாம தொழில் வளர்ச்சி ஏற்பட்டா ஊர் வளரும்னு கண்மூடித்தனமான நம்பிக்கையில் இருக்காங்க. சுவர் இல்லாம சித்திரம் வரைய முடியாது... உடல் ஆரோக்கியத்தை இழந்தப்புறம் என்ன வளர்ச்சி ஏற்பட்டு என்ன பிரயோஜனம்?''

அறிவுமணி அவள் பேச்சை கவனமாய் காதில் வாங்கிக் கொண்டு தலையசைத்தார்.

''உங்க கோரிக்கையை மனுவா எழுதிக் கொடுங்க... நான் இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு போறேன்.''

''ரொம்ப நன்றி சார்.''

தயாராய் எழுதி வைத்திருந்த மனுவை அவரிடம் நீட்டினாள் சிநேகா.

அறிவுமணி காரில் ஏறிக் கொண்டார். சர்சர்ரென்று கார்கள் பறந்தன.

சிநேகாவின் மனசெங்கும் நம்பிக்கைப்பூக்கள்.



## 13

உயிரினங்கள் வாழ சூழ்நிலை மண்டலம் அவசியம். இந்த மண்டலத்தை தாவரமும், விலங்குகளும் சேர்ந்தே உருவாக்குகின்றன. ஆக சுற்றுச் சூழல் காப்பாற்றப்பட தாவர மண்டலங்களை மட்டுமல்ல விலங்கினங்களையும் அழியாமல் பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியம்.

விலங்குகளைக் கொல்வது மட்டுமல்ல அவற்றுக்குத் தொந்தரவு தருவதே குற்றம் என்று சட்டமே இயற்றப்பட்டு விட்டது. சுயநலத்திற்காக சட்ட திட்டங்களை மீறுவதுதான் மனிதனுக்கு ஆதாம் காலத்திலிருந்தே பழக்கமாகிப் போய் விட்டதே!

ப்ரமோத் பதட்டமாயிருந்தான்.

எதிரே இருந்த சந்தீப்பை அவஸ்தையோடு பார்த்தான்.

''சந்தீப்... உன்னோட வுட்பி சிநேகாவால நிலைமை ரொம்ப மோசமாகப் போயிட்டிருக்கு.''

''கதிரேசனும் வாசுகியும் இல்லைன்னா அறிமுகமில்லாத கிராமத்துக்குள்ளே அவளால எதுவும் செய்ய முடியாதுன்னு நாம நினைச்சோம். ஆனா நிலைமை தலைகீழாயிடுச்சு.''

''வேலுவைக் கல்யாணம் பண்ணிக்க இருந்த பொண்ணும்... குயிலாவும் கதிரேசன், வாசுகியோட இடத்தை நிரப்பிட்டாங்க... விளைவு... சிநேகாவோட வேகம் குறையவேயில்லை...''

சந்தீப் நெற்றியைக் கீறிக் கொண்டே சொன்னான்.

''ப்ரமோத்... சாதாரண கன்சல்டன்ட்டாத்தான் நான் இந்த ஃபாக்டரிக்குள்ளே நுழைஞ்சேன். என்னோட திறமையைப் பார்த்து என்னை ஒன் ஆப் த மேனேஜிங் பார்ட்னரா போட்டுக்க முடிவு பண்ணிட்டிங்க. இந்தப் பெரிய வாய்ப்பு கை நழுவிப் போகாம இருக்கறதுக்காக நான் எந்தத் தியாகத்துக்கும் தயாரா இருக்கேன்.''

''என்ன பண்ணலாம்?''

''நமக்கு எதிராகக் கிளம்பின வாசுகியையும்,

கதிரேசனையும் எப்படி சாமர்த்தியமா அப்புறப்படுத்தினோமோ அதே மாதிரி சிநேகாவையும் அப்புறப்படுத்திடலாம்.''

''சந்தீப்... அவ உங்களோட...''

''ம்ஹூம்... அதெல்லாம் மறந்துடுங்க. இப்ப அவ நம்ம எதிரி... அவ்வளவுதான்.''

''கதிரேசனையும் வாசுகியையும் தீர்த்துக்கட்டின மாதிரி சிநேகாவைத் தீர்த்துக் கட்டறது அவ்வளவு சுலபமில்லை சந்தீப்...''

''ஏன்?''

''அவங்க ரெண்டு பேரையும் தீர்த்துக் கட்டி தூக்கில் தொங்க விட - காதல்ங்கற சாக்கு கிடைச்சது... அவங்க காதலிக்கறதா நம்ப வெச்சு ஊர் மக்களின் மனசில் வெறுப்பேத்தினதில் அந்தக் கொலைகளை யாருமே கிளறலை... ஆனா சிநேகா விஷயம் அப்படியில்லை.''

''இவளுக்கும் ஒரு காரணத்தை யோசிச்சா என்ன?''

''மறுபடி தற்கொலைன்னா சந்தேகம் வரும்...''

''தற்கொலை செட்டப் வேண்டாம்... கொலை பண்ணி அந்தப் பழியை வேற யார் மேலாவது போட்டா?''

''அப்பவும் சந்தேகம் நம்ம மேல திரும்பும்.''

''எப்படி?''

''அவ ஃபாக்டரிக்கு எதிரா போராடறாங்கறது அமைச்சர் லெவலுக்கு தெரிஞ்சாச்சு. இந்த நிலைமைல போராடறவங்க எல்லாம் வரிசையா ஏன் சாகறாங்கன்னு போலீஸ் சந்தேகப்பட ஆரம்பிச்சிடுவாங்க... நிலைமை கைமீறிப் போயாச்சு.''

''அப்படின்னா ஒன்னுமே செய்ய முடியாதா?''

''அதிகாரிகளைப் பணத்தைக் காட்டி கைக்குள்ளே போட்டுக்கலாம். ஆனா முந்தி மாதிரி பணம் வாங்க இப்போ பயப்படறாங்க.''

''ட்ரெயினேஜ்... டிராப்டிங்கையெல்லாம் - ஓரளவுக்கு இந்தப் பிரச்சினைகள் ஓயற வரைக்கும் ஒப்புக்குச் சப்பாணியா சரி பண்ணி வைப்போமா?''

''அப்படித்தான் செய்யணும்... ஆனா அதுக்கே பல லட்சங்கள் செலவாகும்...''

''சில லட்சங்களால ஆட்களை விலைக்கு



வாங்க... கடைசி நேர முயற்சி பண்ணிப் பாருங்க. ப்ரமோத்... மிச்சத்தை அப்புறம் பார்ப்போம்...''

தலையாட்டினான் ப்ரமோத்.

சந்தீப் வீடு திரும்பியபோது சிநேகா உற்சாகமாய் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்து சந்தோஷப் புன்னகை பூத்தாள்.

''வாங்க சந்தீப்... உங்களைத்தான் எதிர்பார்த்துட்டிருந்தேன்...''

''எதுக்கு?''

''கார் வேணும்.''

''எங்கே போறே...?''

''இதைப் பார்த்தீங்களா... உங்க ஃபாக்டரி அராஜகங்களுக்கெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா முடிவு வந்திட்டிருக்கு.''

ஒரு பழுப்பு நிற அரசாங்கக் காகிதத்தை அவனுக்கு முன்னால் நீட்டினாள். அதில் தமிழில் டைப் செய்யப்பட்ட எழுத்துக்கள்.

''என்ன லெட்டர் இது?''

''செக்ரட்டரியேட்லயிருந்து வந்திருக்கு.''

''என்னன்னு?''

''அன்னிக்கு கள்ளிப்பட்டி வழியாப் போன மினிஸ்டரை வழிமறிச்சு மனு கொடுத்தோம் இல்லையா? அது வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சு.''

கருத்த முகத்தோடு அவளைப் பார்த்தான் சந்தீப்.

''என்ன எழுதியிருக்காங்க?''

'' **'உடனே உங்கள் புகார் சம்பந்தமான ஆதாரங்களோட கலெக்டரைப் போய்ப் பாருங்க'**ன்னு லெட்டர் வந்திருக்கு.''

''நினைச்ச மாதிரி கலெக்டரைப் போய்ப் பார்க்க முடியாது.''

''ஏன்?''

''அப்பாயின்மெண்ட் வேணும்.''

புன்னகைத்தாள்.

''இந்த லெட்டரே அப்பாயின்மெண்ட் லெட்டர்தான்... கலெக்டரை எத்தனை மணிக்குப் பார்க்கணும்னு தெளிவா டைப் பண்ணி அனுப்பியிருக்காங்க.''

மேலும் ஏதோ அவன் கேட்கு எத்தனிக்க -

அவனிடமிருந்து கார் சாவியைப் பறித்துக் கொண்டு வெளியேறினாள்.

மாருதி கார் கிளம்பிச் செல்லும் ஓசை கேட்டது.

கலெக்ட்ரேட் வளாகத்தில் காரை நுழைத்தாள் சிநேகா.

முன்சீட்டில் குயிலாவும், வேலுவின் கையால் தாலி வாங்க இருந்த பார்வதியும் இருந்தார்கள்.

பின் இருக்கையில் சில ஆண்கள்.

மர நிழலில் நிறுத்தி விட்டு இறங்கினாள்.

''குயிலா... நான் குடுத்த பேப்பர்சை எல்லாம் எடுத்துக்க...''

''எடுத்துகிட்டேங்க.''

''வாங்க போகலாம்.''

ஆபீசிற்குள் நுழைந்தார்கள்.

வராந்தாவில் கும்பல் கும்பலாய் நின்று ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். கோப்புகளை சுமந்தபடி சிலர் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தார்கள். சிநேகா கலெக்டரின் பி.ஏ.வை அணுகி கடிதத்தை நீட்டினாள். கண்ணாடியை உயர்த்தி விட்டுக் கொண்டு கடிதத்தைப் படித்து முடித்தவர் நிமிர்ந்தார்.

சிநேகாவுடன் புடைசூழ்ந்திருந்த மற்றவர்களைக் கவனித்து விட்டு சன்னமான குரலில் சொன்னார்.

''நீ மட்டும் வாம்மா... பாக்கிப் பேரெல்லாம் வராந்தாவில் இருக்கட்டும்...''

அவர்கள் ஒதுங்கிக் கொள்ள, பி.ஏ.வை பின்தொடர்ந்து கலெக்டரின் அறைக்குள் பிரவேசித்தாள் சிநேகா.

இளம் வயதிலிருந்த அந்த கலெக்டர் புன்னகை முகம் காட்டி அவளை உட்காரச் சொன்னார்.

''இந்தப் பிரச்சினையை உடனடியாக கவனிக்கச் சொல்லி ப்ரஷர் வந்திருக்கு... அந்த ஃபாக்டரியால சுற்றுச்சூழல் பாதிக்கிறதா மனு குடுத்திருக்கீங்க... உயிர்கள் பலியாகறதாகவும் மனுவில் சொல்லியிருக்கீங்க...''

''ஆமா சார்...''

''அதை ஆதாரபூர்வமா நிரூபிக்கற தகவல்கள் இருக்கா?''

சிநேகா தான் கொண்டு வந்திருந்த ஃபைலைப் பிரித்து அந்தத் தாள்களை எடுத்தாள்.



''ரசாயனப் பொருட்களால் உடல் பாகங்கள் அரிக்கப்பட்டு இறந்திருக்கார் அப்படிங்கறதை உறுதிப்படுத்தும் டாக்டர் ரிப்போர்ட் சார்...''

''குட்...''

கலெக்டர் அந்த மருத்துவச் சான்றிதழை உன்னிப்பாய்ப் பார்வையிட்டார். பெரிய வரைபடத் தாள்களை அவரிடம் நீட்டினாள். ''இதெல்லாம் ஃபாக்டரி லே அவுட் படங்கள் சார்... அதாவது அவங்க அரசாங்கத்திடம் ஒப்படைச்ச லே அவுட்டுக்கும் இதுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கும்... விதிகளை மீறி அவங்க அமைச்சிருக்கும் ஆக்சுவல் லே அவுட் இது.''

''இதை யார் போட்டது?''

''கதிரேசன்னு ஒருத்தர். அவர் அந்த ஃபாக்டரில தகவல் சேகரிக்கறதுக்காகவே வேலைக்கு சேர்ந்தார்.''

''எங்கே அவர்? வரலையா?''

''ஹி ஈஸ் நோ மோர் சார்.''

''என்ன...?''

சிநேகா அவனும் வாசுகியும் இறந்து போனதை அவருக்கு விளக்கினாள்.

''அது தற்கொலைதானான்னு எனக்கு சந்தேகம் இருக்கு சார்... அவங்க சொல்ற மாதிரி ரெண்டு பேரும் காதலிக்கலை. அதை என்னால உறுதியா சொல்ல முடியும்... தவிர தற்கொலை பண்ணிக்கற அளவுக்கு அவங்க கோழைகள் இல்லை...''

''அந்தப் பொண்ணோட கையெழுத்தில் லெட்டர் இருந்ததுன்னு நீதானே சொன்னே?''

''அது எப்படின்னுதான் எனக்குப் புரியலை சார்.''

''ஓ.கே. நான் மறு விசாரணைக்கு உத்தரவிடறேன்.''

''தாங்க்யூ சார்... அந்த ஃபாக்டரி இயங்கற ஒவ்வொரு நாளும் அங்கே வாழற ஜனங்களின் ஆயுள் இன்ஸ்ட்டால்மென்டில் பறிக்கப்படுது... தயவு செஞ்சு உடனடியா அந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்தணும்.''

''இந்த லே அவுட்டுகளை உங்க புகார் மனுக்களின் அடிப்படையில் உடனடியா இன்ஸ்பெக்ஷனுக்கு ஏற்பாடு செய்யறேன்.''

சிநேகாவின் அவநம்பிக்கை முகத்தைப்

படித்தவராய்ப் புன்னகைத்தார்.

"இங்கே உள்ள ஆட்களை அவங்க எப்பவோ விலைக்கு வாங்கியிருப்பாங்கன்னு எனக்குத் தெரியும். விஜிலன்சிலிருந்து ஸ்பெஷல் ஸ்க்வார்டை அனுப்பி வைக்கறேன்."

"தாங்க்யூ வெரிமச் சார்."

கலெக்டர் கைகூப்பினார்.

---

**இந்த காலி கட்டத்துக்கு காரணம் 15 - வது அத்தியாய கட்டத்தில் தெரியும்.**

---

## 14

**கா**ர் புயல் மாதிரி வந்து நின்றது.

சந்தீப் உச்சக்கட்ட கோப முகத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான்.

சிநேகாவை உஷ்ணப் பார்வை பார்த்தபடி கத்தினான்.

"போதுமா? உன்னோட ஆசை நிறைவேறிடுச்சு... போதுமா?"

"என்ன சந்தீப்... கோபமா?"

"விஜிலன்ஸ் டீம் இன்ஸ்பெக்ட் பண்ணி ஃபாக்டரியை சீல் வெச்சிட்டாங்க..."

சிநேகா துள்ளலாய் நிமிர்ந்தாள்.

"வாாவ்... ரியலி ஹாட் அண்ட் ஸ்வீட் நியூஸ்"

"வாழ்க்கையில் நானும் பெரிய லெவலுக்கு வரணும்னு திட்டம் போட்டிருந்தேன். அது நிறைவேறப் போற சமயத்தில் என்னோட ஆசைக்கு நீயே எமனா வந்து சேர்ந்துட்டியே..."

"சந்தீப்... வாட் டூ யூ மீன்?"

"நானும் அந்த ஃபாக்டரியில் ஒன் ஆப் த டைரக்டராக ஆக இருந்தேன்... பேப்பர்ஸ்ல சைன் பண்றதுதான் பாக்கி... அதுக்காக என்னென்ன கஷ்டங்களெல்லாம் பட்டேன் தெரியுமா? அத்தனையையும் கெடுத்திட்டியே."

"அடுத்தவங்க தயவுல சம்பாதிக்கற சம்பாத்தியம் நமக்கு வேண்டவே வேண்டாம்."



பல்லைக் கடித்தான் சந்தீப்.

"டோண்ட் ஸே யுவர் ப்ளடி ஃபிலாஸபிஸ்..."

சிநேகா சிரித்தாள்.

"உங்க கோபம் என்னை எந்த விதத்திலும் பாதிக்காது. நான் நினைச்சதை அச்சீவ் பண்ணிட்டேன். என்னோட வேலை முடிஞ்சது... இனி நான் ஊருக்குக் கிளம்ப வேண்டியதுதான்..."

"சரி... அரை மணி நேரத்தில் கிளம்பு..." என்றான் அமைதியான குரலில்.

சிநேகா சூட்கேசை விரித்துத் தன்னுடைய உடைகளை அடுக்க ஆரம்பித்தாள்.

வீடு பூராவும் தேடி அவளுடைய பொருட்களை சேகரித்தாள்.

டயரி ஒரு பக்கம் கிடந்தது.

ஹேர்க்ளிப்கள் ஒரு பக்கம்.

சூட்கேசில் பொருட்களை பேக் பண்ணி முடித்தாள் சிநேகா.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செலவானது.

முன்னறைக்கு வந்தாள்.

"கிளம்பியாச்சா...?".

"ஆச்சு..."

எழ முயற்சித்தவனைத் தடுத்தாள்.

"இன்னும் ஒரு அரைமணி நேரம் இருங்க சந்தீப்... என்னோட போராட்டத்துக்கு உதவி பண்ணின நண்பர்கள்கிட்டே சொல்லாம எப்படி வர்றது...? இப்ப வந்திடறேன்."

"சீக்கிரம் வா!"

சிநேகா வெளியேறி -

மாருதிக்குள் நிரம்பி -

விருட்டென்று காரைக் கிளப்பினாள்.

கார் **சுற்றுச் சூழல் விழிப்புணர்வுக் கழக** அலுவலகத்தின் வாயிலைத் தொட்டு அங்கே நிற்காமல் கடந்து போனது.

கிட்டத்தட்ட இருபது நிமிஷப் பிரயாணம்.

சிவப்புக் கட்டங்களுடன் இருந்த போலீஸ் ஸ்டேஷன் வாசலில் நின்றது கார்.

வாயில் கான்ஸ்டபிளுக்கு பதில் சொல்லி விட்டு உள்ளே நுழைந்தாள்.

இன்ஸ்பெக்டர் அவளை - சில விநாடிகள் யோசித்தபின் - அடையாளம் தெரிந்து கொண்டார்.

''வாம்மா... உக்கார்!''

அவள் உட்கார்ந்தபின் கேட்டார்.

''என்ன விஷயம்?''

தயங்கிக் கொண்டே சொன்னாள்.

''அந்த தற்கொலைகள் சம்பந்தமாத்தான் உங்ககிட்டே பேச வந்தேன் சார்...''

அவர் சலித்துக் கொண்டார்.

''உன்னோட சரியான தலைவலிம்மா... கலெக்டர் ஆபீசிலிருந்து மறு விசாரணைக்கு உத்தரவு வந்திருக்கு.''

''என்னோட கருத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்துதான் சார் கலெக்டர் அப்படி உத்தரவு குடுத்திருக்கார்...''

''ப்ராக்டிக்கல் சிரமம் உனக்குத் தெரியாது... எங்களுக்கு இது ஒரு கேஸ்தானா?''

''உங்களுக்கு சிரமமே கொடுக்கக் கூடாதுன்னுதான் நான் போதுமான ஆதாரங்களோட உங்களைப் பார்க்க வந்திருக்கேன்.''

''ஆதாரங்களா? எதுக்கு?''

''கதிரேசனும், வாசுகியும் தற்கொலை பண்ணிக்கலை. அவங்க கொலை செய்யப்பட்டிருக்காங்க - அப்படிங்கறதுக்கு ஆதாரம்...''

சொல்லிக் கொண்டே அந்த நீளத்தாளை நீட்டினாள்.

அதை வாங்கிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

''அப்ளிகேஷன் போலிருக்கு?''

''ஆரம்ப காலத்தில் ஃபாக்டரிக்கு வாசுகி போட்ட அப்ளிகேஷன்... என்ன காரணத்தாலோ அவ வேலைக்கு எடுக்கப்படலை...''



''இதை எதுக்காக இப்ப என்கிட்ட காட்டறே?''

''ஃபாக்டரி பர்சனல் டிபார்ட்மெண்ட்டில் இருக்க வேண்டிய இந்த அப்ளிகேஷன் எங்க வீட்டில் சந்தீப்போட அலமாரியில் இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் இதை நான் பார்த்தேன்...''

''இதற்கும் உன்னோட சந்தேகத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''இதையும் பாருங்க சார்.''

ஒரு புத்தகத்தை நீட்டினாள்.

''இந்த புத்தகத்தில் என்ன இருக்கு?''

''சந்தீப் சமீபத்தில் படிச்சிட்டிருந்த புத்தகம். அதனோட சில பக்கங்களைப் புரட்டிப் பாருங்க சார்.''

இன்ஸ்பெக்டர் புரட்டினார்.

அவன் படித்ததற்கான அடையாளமாய் ஆங்காங்கே சில வரிகள் பென்சிலால் அடிக்கோடிடப்பட்டிருந்தன.

''எனக்கொண்ணும் தெரியலைம்மா... இதிலென்ன விஷயம் இருக்கு?''

''சந்தீப் படிக்கறப்போ அவரையுமறியாம ஒரு காரியம் பண்ணியிருக்கார். புத்தகத்தின் சில இடங்களில் **அன்புள்ள, இப்படிக்கு** - இந்த மாதிரி தமிழ் எழுத்துக்கள் தெரியுது பார்த்தீங்களா?''

''ஆமா...''

''வாசுகியோட கையெழுத்தை சந்தீப் தீவிரமா எழுதிப் பழகியிருக்கார் சார். அதன் விளைவுதான் அவரையுமறியாம புத்தகத்தில் கிறுக்கல்கள்.''

இன்ஸ்பெக்டரின் முகப்பரப்பில் வியப்பு...

சிநேகா தொடர்ந்தாள்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால வரை அவரை என்னோட வருங்கால கணவரா மனசில் வரிச்சிருந்தேன். இந்த அப்ளிகேஷனையும், கிறுக்கல்களையும் பார்த்தப்புறம் அந்த எண்ணத்தை அடியோட மாத்திகிட்டேன். மனசைக் கல்லாக்கிட்டு நேரா இங்கே வந்துட்டேன்.''

கண்ணில் துளிர்த்த சொற்ப நீர்த்துளிகளைப் புறங்கையால் துடைத்தெறிந்தாள் சிநேகா.

15

**மனிதனின் சுயநலத்திற்காக ஆதிகாலம் தொட்டு அழிக்கப்பட்ட லட்சக்கணக்கான தாவர வகைகளுக்கும், மில்லியன் கணக்கான விலங்கினங்களுக்கும் நாம் செலுத்தும் மவுன அஞ்சலியே போன அத்தியாயத்தின் துவக்கத்திலிருந்த வெற்றுக்கட்டம்.**

சிநேகாவின் அம்மாவும் அப்பாவும் அவளை அதிர்ச்சியாய் பார்த்தார்கள்.

''என்னம்மா இப்படி பண்ணிட்டே?'' அப்பா பொரும, சிநேகா புன்னகைத்தாள்.

''எப்படிப்பா?''

''உன் வாழ்க்கையில நீயே மண்ணை அள்ளிப் போட்டுகிட்டே... என்ன இருந்தாலும் சந்தீப் உன்னைக் கட்டிக்கப் போகிற மாப்பிள்ளை. போலீஸ்ல காட்டிக் கொடுக்காமே இருந்து இருக்கலாம்...''

''அப்பா! அவர் பண்ணினது சாதாரண தப்பு இல்லை. ரெண்டு உயிர்களைப் பறிக்கிறதுக்கு அவர் காரணமா இருந்திருக்கார்.''

அம்மா கோபமாய் கத்தினாள்.

''இருக்கட்டுமே... அதனால என்னடி... யார் யாரோ, பண்ணக் கூடாத தப்பையெல்லாம் பண்ணிட்டு பெரிய மனுஷங்க மாதிரி இருக்கிறதில்லையா?''

''யார் எப்படியிருந்தாலும் அதைப் பத்தி எனக்குக் கவலையில்லை. எனக்குக் கணவரா வர்றவர் நல்லவரா இருக்கணும். சந்தீப் இப்போ கெட்டவரா இருக்கலாம். சிறை வாழ்க்கை முடிஞ்சு அவர் வெளியே வரும்போது நிச்சயமா அவர் நல்லவரா மாறியிருப்பார்.''

''அது வரைக்கும்...?''

''அவர்க்காக நான் காத்திட்டிருப்பேன்''

## நிறைந்தது



## வாசகர் கடிதம்




தற்போது தமிழகத்தில் பற்றி எரியும் ஈழப் போரைப் பற்றி கோவை யமுனா ராஜேந்திரன் விளக்கிப் பேசிய உரையின் சாராம்சத்தைத் தக்க சமயத்தில் 'ஃபேக்ஸ்' மூலம் தெரிவித்து எங்களுக்குத் தமிழுணர்வை யூட்டிய ஆர்.கே. சார் அவர்களுக்கு நன்றிகள் பல.

-ப.வைகறை,
சென்னை.

**'நாவல் ஒரு தீண்டத் தகாத வர்க்கம்'** என ஒப்பாரி வைக்கும் 'ஓயாமாறி' களுக்கு 'உமன்இரா' ஆசிரியர் 'பரேஷ் நாத்'தின் கருத்துகள் சம்மட்டி அடியாக இருக்கும் என்று 'எடிட்டர் ஏரியா'வில் ஆசிரியர் ஜீயே கூறியுள்ளது முற்றிலும் உண்மை. அரசாங்கம் கோடிகளைக் கொட்டிச் செய்கிற பணியை ஜீயே போன்ற பத்திரிகையாளர்களும் ஆர்.கே.போன்ற நாவலாசிரியர்களும் 5-10 ரூபாய்களில் முடிப்பது எவ்வளவு பெரிய மகத்தான பணி என்பதை பரேஷ் நாத் சரியாகவே சொல்லியிருக்கிறார். பாராட்டுகள்.

**-ப.நாகராஜன், திசையன்விளை.**

பெண்களின் முன்னேற்றத்தை அவர்களுடைய கணவன்மார்களேகூட விரும்புவதில்லை என்பதை அப்பட்டமாகச் சொன்ன **'ராணி இரண்டாயிரம்'** அற்புதமான நாவல்.

**-ந.செண்பகம், கிண்டி.**

நாவலின் கடைசி அத்தியாயத்தில் ராணி சொல்கிற வார்த்தைகள் (''நம்ம முன்னேற்றத்தைத் தடுக்கிற எதிரிகள்...'') அத்தனையும் சத்தியம். ஒவ்வொருவரும் அந்த வரிகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டும் செயலில் காட்டிக் கொண்டும் இருந்தால் 'அப்படி ஒரு நாள் சீக்கிரமே வரும்' என்ற கனவு நிச்சயம் நிறைவேறும்.

**-இ.அரவிந்தன், கிழக்கு தாம்பரம்.**